www.penakural.com
மலர்: 03 இதழ்: 02 டிசம்பர் 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.:
TNTAM / 2022 / 85375
தமிழ் மாத இதழ்




## பாரதியாரின் படைப்புகளின் தொகுப்பு!
## வெளியிட்டார் பிரதமர் மோடி!



## நான் முதலமைச்சராக இருக்கும் வரை தமிழ்நாட்டில் டங்ஸ்டன் திட்டத்தை அனுமதிக்கவே மாட்டேன்!

சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரகடனம்!





## அடக்குமுறைகள் கூடாது:

விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்: மரு.ராமதாஸ்


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
ROYAL ENFIELD
All kind of bike service and care
Engine
Re - work
High Quality
MOTUL
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect
Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

ஆசிரியர் குரல்

# தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குற்றம்!

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நடைபெறும் சைபர் குற்றங்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதில், பொது இடங்களில் மொபைல் போன்களை சார்ஜ் செய்ய வேண்டாம் என்று ரிசர்வ் வங்கியே வெளியிட்டுள்ள அறிவிப்பு அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. பொது இடங்களில் மொபைல் போன்களை சார்ஜ் செய்வதன் மூலம், வங்கி விவரங்கள் மற்றும் முக்கியமான தகவல்களை பொதுமக்கள் இழக்க நேரிடலாம் என்ற ரிசர்வ் வங்கியின் அறிவிப்பு புதுமையானதாக உள்ளது.

மொபைல் எண்ணுக்கு வரும் 'ஓடிபி' உள்ளிட்ட விவரங்களை யாரிடமும் தர வேண்டாம்; அதன்மூலம் வங்கிக் கணக்கில் இருந்து பணம் திருடப்படும் என்ற எச்சரிக்கையை புரிந்து கொள்ள முடிகிறது. சார்ஜிங் செய்தவன் மூலம் தகவல்கள் திருடப்படுகின்றன என்ற எச்சரிக்கை இதுவரை கேள்விப்படாத ஒன்றாகவும் புரிந்துகொள்ள கடினமானதாகவும் உள்ளது.

சுவர் சாக்கெட்டுகளில் மட்டும் மொபைல் போன்களை சார்ஜ் செய்ய வேண்டும். மற்ற பொது இடங்களில் சார்ஜ் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது. சார்ஜிங் செய்யும்போது என்ன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, எப்படி தகவல்களை திருடுகின்றனர் என்பதை சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாது. தொழில்நுட்ப வல்லுநர்களால் மட்டுமே இதுபோன்ற விஷயங்களை புரிந்துகொள்ள முடியும். பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், ஆம்னி பேருந்துகள், தற்காலிக தங்குமிடங்கள், பன்னடுக்கு வணிக வளாகங்கள் போன்ற பல இடங்களில் பொதுமக்கள் தங்கள் மொபைல் போன்களை சார்ஜ் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் எது பாதுகாப்பானது, எது பாதுகாப்பற்றது என்று பிரித்துப் பார்க்கும் நிலையில் சாதாரண மக்கள் இல்லை. சைபர் குற்றங்களின் வரிசையில் சார்ஜ் செய்யுமிடத்தில் தகவல் திருட்டு என்பது புதிய வடிவமாகவே பார்க்கப்படுகிறது.

ரிசர்வ் வங்கியின் கவர்னராக இருந்து ஓய்வுபெற்றுள்ள சக்தி காந்த தாஸ் கடைசியாக அளித்த பேட்டியில்கூட, சைபர் பாதுகாப்பு மற்றும் அதுதொடர்பான அச்சுறுத்தல்கள் அனைத்து நிறுவனங்களுக்கும், குறிப்பாக ரிசர்வ் வங்கிக்கு மாபெரும் சவாலாக இருக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுபோல சாதாரண மக்கள் புரிந்துகொள்ள முடியாத வகையில் சைபர் குற்றங்கள் வடிவம் பெற்றுவரும் நிலையில், அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வது என்பது சிரமமான காரியம். இதுபோன்ற தொழில்நுட்ப ரீதியான குற்றங்களைத் தடுக்க உரிய வல்லுநர்களை நியமித்து அவர்கள் மூலம் குற்றங்கள் நடப்பதையும், தகவல்களை திருடுவதற்கு இருக்கும் வாய்ப்பையும் குறைக்க வழிகாண வேண்டும். தாங்கள் எப்படி ஏமாற்றப்படுகிறோம் என்பதே தெரியாத நிலையில் உள்ளவர்களை பாதுகாப்பாக இருங்கள் என்று எச்சரிப்பது குறைந்த அளவிலேயே பலனளிக்கும். வங்கி விவரங்கள் உள்ளிட்ட தகவல்களை திருடும் அமைப்புகளை கண்டறியவும், அவர்களை சட்டப்படி தண்டிக்கவும் தேவையான வழிமுறைகளை, தொழில்நுட்பங்களை உரிய அமைப்புகள் உருவாக்குவதே சைபர் குற்றங்களில் இருந்து சாதாரண மக்களை காப்பதற்கான வழி!

– ஆசிரியர்


PENA KURAL TAMIL MONTHLY

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 03 இதழ்: 02 டிசம்பர் 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : N V சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா.S, B.E.,

கௌரவ ஆசிரியர் : K.ராமசுப்ரமணியன்

இணை ஆசிரியர் : K.ரமேஷ்குமார்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, ந.மதிவாணன், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், B.நாராயணசாமி

தலைமை நிருபர்கள்:
B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், K.மாரிதுரை, A.தங்கராஜ்

நிருபர்கள்:
Ba.சரவணன், K.கலைமணி, D.பாமா, அன்புமணி, S.பிரகாசம், இளைய தர்ஷினி, P.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், D.ராஜேஷ், K.சுபுலட்சுமி, S.ஜெயராஜ்

புகைப்பட நிருபர்கள்:
V.கவியரசன், K.மிதுன் சாய்

சட்ட ஆலோசகர்கள்:
M. குணசீலன், B.Com.,M.L.,
G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
Tamilni Printz & Graphics - 8754582123

நிர்வாக அலுவலகம்:
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
news@penakural.com
www.penakural.com


பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *

Scan and visit the website

# நான் முதலமைச்சராக இருக்கும் வரை தமிழ்நாட்டில்

# டங்ஸ்டன் திட்டத்தை அனுமதிக்கவே மாட்டேன்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரகடனம்!



"நான் முதலமைச்சராக இருக்கும் வரை டங்ஸ்டன் திட்டத்தை தமிழ்நாட்டிற்குள் நுழைய விடமாட்டேன்'' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் பிரகடனம் செய்தார்.

சட்டப்பேரவையில் 09.12.2024 அன்று மதுரை மாவட்டம் அரிட்டப்பாட்டியில் டங்ஸ்டன் சுரங் கத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்ய வலியுறுத்தி தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தனித் தீர்மானம் மீது பல்வேறு கட்சி உறுப்பினர்களும் உரையாற்றினர்.

அந்த வகையில் தனித் தீர்மானம் மீது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உரையாற் றினார். அப்போது, "தமிழக அரசு 10 மாதங்களாக என்ன செய்துகொண்டிருந்தது'' என்று எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து அதே கேள்வியை எழுப்பிய வண்ண மிருந்தார்.

அப்போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்,. தொடக்கம் முதலே டங்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிர்த்து வருகிறோம். சுரங்கத்துக்கு ஒப்பந்தம் விடுவதற்கான சட்டத்தில் ஒன்றிய அரசு தானே ஒரு திருத்தத்தை செய்துவிட்டது. யாரையும் கேட்கவில்லை. சட்டத்தைத் திருத்திவிட்டு ஒன்றிய அரசு என்ன சொல்கிறது என்றால், சுரங்கத்துக்கான ஏலம் விடும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கே உள்ளது.

மேலும், ஒன்றிய அரசு தேர்வு செய்யும் ஏலதார ருக்கு சுரங்கத்தை குத்தகை விடும் அதிகாரம் மட்டுமே மாநிலத்துக்கு உள்ளது என்று கூறி-யிருக்கிறது. டங்ஸ்டன் சுரங்கத்தால் ஏற்படும் பாதிப்பு களை புள்ளி விவரங்களுடன் ஒன்றிய அரசுக்கு தெரிவித்துவிட்டோம். தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பது முற்றிலும் தவறானது என்று கூறினார்.

அப்போதும் எடப்பாடி பழனி சாமி தான் கூறியதையே மீண்டும் கூறினார்.

இந்நிலையில் சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு அளித்த பதிலடி வருமாறு:-

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்தில் உங்கள் உறுப்பினர்கள் இத்தனை பேர் இருக்கிறார்கள் என்று பெருமை பேசுகிறீர்களே, என்ன செய்தீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பி னர்கள் நாடாளுமன்றத்திலே கடுமையாக எதிர்த்திருக் கிறார்கள். நான்கூட, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரம் இல்லாமல் பேசமாட்டார் என்று பொறுமையாக இருந்தேன். ஆனால், இப்போது நான் விவரத்தைக் கேட்டு ஆதாரத்தோடு சொல்

கிறேன். நாடாளுமன்றத்திலே எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக இதை எதிர்த்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அங்கே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில், அந்த மாவட்டத்தில் அமைச்சராக இருக்கக்கூடிய மூர்த்தி அவர்கள் நேரடியாகச் சென்று, அந்தப் போராட்டத்தின் தன்மையைப் பற்றி அறிந்துகொண்டு, "போராட்டத்தை நிறுத்துங்கள்; எங்கள் அரசு உங்களுக்கு ஆதரவாக இருக்கும்" என்று சொன்னார். அதோடு, இது தொடர்பாக முதலமைச்சர் அவர்களும் இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்று சொல்லி, சட்டமன்றத்தில் இது குறித்து தீர்மானம் கொண்டு வரப்போகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடத்தில் சொல்லி, அதற்குப் பிறகுதான் இந்தத் தீர்மானம் இங்கு வந்திருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு வேகமாகப் பேசிவிடுகின்ற காரணத்தால் ஏதோ சாதித்துவிட்டோம் என்று நீங்கள் நினைத்துவிடவேண்டாம். நிச்சயமாகச் சொல்கிறேன்; உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள் அவ்வப்போது தொடர்ந்து கடிதம் எழுதியிருக்கிறோம்; எங்களுடைய கண்டனக் குரலை நாடாளுமன்றத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல; போராட்டக்களத்தில் ஈடுபட்டிருப்பவர்களிடத்தில்கூட நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, சட்டமன்றம் கூடுகின்ற போது இதுபோன்ற ஒரு தீர்மானத்தை அவையில் கொண்டு வருவோம் என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதோடு, ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதுகின்றபோது, அதுதொடர்பா ன செய்தி வெளியீடுகளில் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக கடிதம் எழுதியிருக்கிறார் என்கிற செய்தியெல்லாம் விவரமாக வந்திருக்கிறது. ஆனால், நீங்கள் இதுகுறித்து தெரியவில்லை, தெரியவில்லை என்று பேசினால், என்ன அர்த்தம்?

நாடாளுமன்றம் கூடி, கூடி கலைந்து கொண்டிருக்கிறதே தவிர, அங்கே தொடர்ந்து அவை நடவடிக்கைகள் நடந்ததாக நமக்கு இதுவரையில் செய்தி வரவில்லை. ஆனால், கிடைத்த நேரத்தைப் பயன்படுத்தி, அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறோம். நாடாளுமன்றம் கூடுகிறது; ஆனால், அவையை ஒத்திவைக்கிற சூழ்நிலைதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறதே தவிர, தொடர்ந்து அவை நடக்கவில்லை. இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையில் படித்திருப்பார் என்று நினைக்கிறேன்.

அப்போது எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம்; எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று தவறான தகவலை நீங்கள் இங்கே பதிவு செய்கிறீர்கள். அதையும் நான் தெளிவுபடுத்திவிட்டேன். எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறோம்; தி.மு.க. சார்பில் அங்கே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம்.

சட்டம் நிறைவேறியது என்றால், அது எங்களுடைய ஆதரவில் நிறைவேறவில்லை. நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம். அது நாடாளுமன்றத்தில் பதிவாகியிருக்கிறது. எப்படி நாங்கள் அதைத் தடுக்க முடியும்? Majority அவர்கள் இருக்கும்போது, அதை எப்படிச் செய்யமுடியும் என்று சொல்லுங்கள். நீங்களும் சில பிரச்சினைகளில் அங்கே குரல் கொடுத்தோம்; குரல் கொடுத்தோம் என்று பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். அப்போதெல்லாம் நிறைவேற்றிய தீர்மானத்தை உங்களால் தடுத்துவிட முடிந்ததா? சொல்லுங்கள்.

ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் ஏலம் விட்டு விட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், நிச்சயமாகச் சொல்கிறேன். ஒன்றிய அரசு ஏலம் விட்டாலும், நிச்சயமாக, உறுதியாக இந்த அரசு அதற்குரிய அனுமதியை தருவதற்கான வாய்ப்பே கிடையாது. அதிலே திட்டவட்டமாக இருக்கிறோம். இதுதான் முடிவு.

மறுபடியும் ஆரம்ப காலக்கட்டத்திலிருந்து என்று, ஆரம்பத்திற்குப் போய்விட்டார். திரும்பத் திரும்ப ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். நான் முதலமைச்சராக இருக்கிற வரையில் நிச்சயமாக ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) வந்தால் அதைத் தடுத்தே தீருவோம். திரும்ப, திரும்பச் சொல்கிறேன். நான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற வரையிலே, நிச்சயமாக நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏன் இவ்வளவு காலதாமதம்?" என்று மீண்டும் மீண்டும் கேட்கிறார். அவர்கள் பார்வையில் அப்படியிருக்கலாம்; அல்லது நாம் தவறிவிட்டோம் என்றுகூட இருக்கலாம். ஆனால், எங்களுடைய பார்வையில் அவ்வப்போது நாங்கள் இந்தப் பிரச்சினையை ஒன்றிய அரசுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்; கடிதம் எழுதியிருக்கிறோம்.

– B.நவின்குமார்



# அடக்குமுறைகள் கூடாது: விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்: மருத்துவர் ராமதாஸ்



குறைந்தபட்ச கொள்முதல் விலை, பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட விவசாயிகளின் அனைத்துக் கோரிக்கைகளையும் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும். போராடும் விவசாயிகள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடாமல் அவர்களை அழைத்து பேச்சு நடத்த வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “நெல் உள்ளிட்ட அனைத்து வேளாண் விளைபொருள்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படுவதற்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராடுவதற்காக டெல்லி நோக்கி பேரணியாக சென்ற விவசாயிகள் மீது ஹரியானா - பஞ்சாப் எல்லையில் உள்ள ஷம்பு பகுதியில் கண்ணீர்புகைக் குண்டுகளை வீசியும், தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும் ஹரியானா காவல்துறையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் 8 விவசாயிகள் காயமடைந்த நிலையில் டெல்லி நோக்கிய அவர்களின் பேரணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விவசாய அமைப்புகளைச் சேர்ந்த 101 பேர் பேரணியாக செல்ல அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அனுமதி அளிக்கப்பட்ட 101 பேர் மட்டும் தான் பேரணியாக சென்றதாக விவசாயிகள் கூறும் நிலையில், அதிக எண்ணிக்கையிலானவர்கள் பேரணியில் வந்ததாகவும், அனுமதி பெறாத சிலரும் வந்ததாக் கூறி அவர்கள் மீது காவல்துறையினர் தாக்குதல் நடத்துவது நியாயமல்ல.

உயிர் ஆதாரக் கோரிக்கைகளை முன்வைத்துப்

போராடும் விவசாயிகள் மீது காவல்துறையினர் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவது கண்டிக்கத்தக்கது. அனைத்து வேளாண் விளைபொருள்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படுவதற்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் வழங்க வேண்டும்; வேளாண்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்; விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்; மின்சாரக் கட்டணங்களை உயர்த்தக் கூடாது.

2013ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தை அதன் மூல வடிவத்தில் செயல்படுத்த வேண்டும் என உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தான் விவசாயிகள் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் மிகவும் நியாயமானவையாகும்.


இந்தியாவில் முழுக்க முழுக்க விவசாயத் தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு சராசரியாக ரூ.27 மட்டும் தான் வருமானம் கிடைப்பதாக விவசாயிகளின் வாழ்க்கை நிலை குறித்து ஆராய அமைக்கப்பட்ட உச்சநீதிமன்றக் குழு கூறியுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக வேளாண் பயிர்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை. கொள்முதல் விலை சொல்லிக்கொள்ளும்படியாக அதிகரிக்கவில்லை; அதனால் விவசாயிகள் படிப்படியாக கடன் வலையில் சிக்கி, இப்போது மீள முடியாத கடன் வலையில் சிக்கிக் கொண்டதாக அக்குழு அதன் இடைக்கால அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிறது.

கடன் சுமை அதிகரித்து விட்டதால் தான் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதாகவும், கடந்த 30 ஆண்டுகளில் 4 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருப்பதாகவும் கூறியுள்ள அந்தக் குழு, விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வாக பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. அவ்வாறு இருக்கும் போது பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட கோரிக்கைகளை பரிசீலிப்பதில் எந்தத் தவறும் இல்லை. உச்சநீதிமன்றக் குழுவின் இந்த பரிந்துரையை பாமக முழுமையாக ஆதரிக்கிறது.

எனவே, குறைந்தபட்ச கொள்முதல் விலை, பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட விவசாயிகளின் அனைத்துக் கோரிக்கைகளையும் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும். போராடும் விவசாயிகள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடாமல் அவர்களை அழைத்து பேச்சு நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

- துரை.சந்துரு

# பயனுள்ள தகவல்கள்



1. திருமணம் ஆன பெண்கள் ஒரே ஒரு விரலில் மட்டுமே மெட்டி அணிய வேண்டும். ஒரே காலில் இரண்டு மூன்று அணிய கூடாது. அணிவதால் ஆரோக்கியம் மற்றும் கணவனின் வளர்ச்சி (உடல், வருமானம்) பாதிப்பு அடையும்.
2. கோலமிடும் போது தெற்கே பார்த்து நின்றுகொண்டு கோலமிடக் கூடாது.
3. கர்ப்பமான பெண்கள் உக்ர தேவதைகள் இருக்கும் கோவிலுக்கு போகக்கூடாது.
4. பெண்கள் கிழக்கு திசையை நோக்கி குங்குமத்தை இரண்டு புருவ மத்தியிலும் உச்சந்தலையிலும் இட்டுக்கொள்ளவேண்டும். திருமணம் ஆகாதவர்கள், உச்சந்தலையில் இட்டுக்கொள்ளகூடாது.
5. அமாவாசை, தவசம் ஆகிய நாட்களில் வாசலில் கோலம் போடக்கூடாது.
6. மஞ்சள் நூல் கயிற்றில் மட்டுமே திருமாங்கல்யத்தை கோர்த்து அணிந்து கொள்ள வேண்டும்.
7. பெண்கள் எப்போதும் முந்தானையை தொங்க விட்டு நடக்கக்கூடாது.
8. கோவிலில் தெய்வத்தை வணங்கும் பொழுது பின்னங்கால்கள் இரண்டையும் சேர்த்துக்கொண்டு முன் நெற்றி தரையில் படுமாறு மண்டியிட்டு வணங்கவேண்டும்.
9. தலை குளிக்கும் பொழுது சுமங்கலி பெண்கள் சிறிது மஞ்சளை உரைத்து முகத்தில பூசிக்கொண்டு பிறகு குளிக்க வேண்டும்.
10. வெள்ளிக்கிழமைகளில், விஷேச நாட்களில் (பண்டிகை நாட்களில்) பாகற்காயை சமைக்க கூடாது. அவ்வாறு செய்வதால் பாவம் வந்து சேரும்.

- கவியரசன்

# 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு ஊராட்சியில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிமாறுதல்




மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்கள் ஒரே ஊராட்சியில் பல ஆண்டுகள் பணிபுரிவதால் தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தம் சட்டம் 2022)- விதி 2(2)-ன்படி நிர்வாக காரணங்களுக்காக 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு ஊராட்சியில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2023 முதல் பணிமாறுதல் செய்து ஆணையிட வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)-களுக்கு ஆணை-யிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக அல்லது தற்போது பணிபுரியும் ஊராட்சியில் மொத்தமாக 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்கள் அனைவரும் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
2. நியமனம் செய்யப்பட்ட ஊராட்சியிலிருந்து சில காலம் வேறு ஊராட்சிக்கு மாறுதலில் சென்று மீண்டும் நியமனம் செய்யப்பட்ட ஊராட்சியில் மொத்த பணிக்காலங்களில் 10 அண்டுகள் கடந்திருந்தால் மாறுதல் செய்யப்பட வேண்டும்.
3. ஓர் ஆண்டுக்குள் பணி ஓய்வு பெறும் அலுவலர்களை பணிமாறுதல் செய்ய கூடாது.
4. அருகில் உள்ள ஊராட்சிக்கு மாற்றம் செய்ய வேண்டும்.
5. ஏற்கனவே பணிபுரிந்த ஊராட்சிக்கு மாற்றம் செய்யக் கூடாது.
6. ஊராட்சிமன்ற தலைவர்கள் ரத்த உறவுகளாக உள்ள ஊராட்சிக்கு மாற்றம் செய்ய கூடாது.
7. பணிமாறுதல் செய்யப்படும் ஊராட்சி செயலாளர்கள் பொறுப்புகளை முழுமையாக ஒப்படைக்கப்பட வேண்டும். பெறப்பட வேண்டும். (தவறும்பட்சத்தில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட வேண்டும்)
8. பணிமாறுதல்கள் அனைத்தும் ஏப்ரல் 15-ஆம் தேதிக்குள் முடித்து அதன் அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.
9. தொடர்ச்சியாக புகார் வரக்கூடிய ஊராட்சி செயலாளர்களையும் பணிமாறுதல் செய்ய வேண்டும்.
10. பணி ஓய்வு / இறப்பினால் காலிப்பணியிடம் ஏற்பட்ட ஊராட்சிகள் மற்றும் பணிநியமனம் தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ள ஊராட்சிகளுக்கு பணிமாறுதல் செய்ய கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளை பின்பற்றாவிட்டால், சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- D.ராஜேஷ்

# குங்கிலியம்



## மருத்துவ பயன்கள்

குங்கிலியம் கைப்புச் சுவையும் வெப்பத் தன்மையும் கொண்டது. வெப்பமுண்டாக்கும்; கோழையகற்றும்; சிறுநீரைப் பெருக்கும். கீல்வாதம், நகச்சுற்று, சீழ்ப்புண், விஷக்கடி, எலும்பு நோய்களைக் குணமாக்கும்.

குங்கிலியத்தைக் கொண்டு, குங்கிலிய வெண்ணெய், குங்கிலிய பற்பம், குங்கிலியத் தைலம் போன்றவைகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்குக் கிடைக்கின்றன. அவற்றையும் வாங்கிப் பயன்படுத்தலாம்.

### மருத்துவ பயன்

மேகப்புண், வெட்டை போன்ற நோய்களைக் குணப்படுத்துவதில் இந்த மருந்துகள் முக்கிய இடம் வகிக்கின்றன. தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும், வட இந்தியாவில் இமயமலை அடிவாரத்தில் உள்ள காடுகளிலும் விளையக் கூடிய கருமருது மரத்தின் பிசினே குங்கிலியம் எனப்படுகின்றது.

கருமருது மரத்தினைக் கீறி, வடு ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து வடியும் பிசின் சேகரிக்கப்படுகிறது. இது உறைந்து, மருத்துவத்தில் பயன்படும் குங்கிலியமாகிறது. குங்கிலியம் காய்ந்த நிலையில், நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். குங்கிலியத்திற்கு, குக்கில், குக்கிலியம் ஆகிய மாற்றுப் பெயர்களும் உண்டு. இது கற்பூரத் தைலத்தில் கரையும்.

50 கிராம் குங்கிலியத்தை தூள் செய்துக் கொண்டு, லு லிட்டர் நல்லெண்ணெய் உடன் சேர்த்து, நன்றாகக் காய்ச்சி, கண்ணாடி சீசாவில் பத்திரப்படுத்திக் கொண்டு, மூட்டுகளில் பூசிவர மூட்டுவலி தீரும்.

வெள்ளைபடுதல் குணமாக குங்கிலியத்தை நெய்விட்டுப் பொரித்து, தண்ணீர் விட்டு நன்றாகக் குழைத்து, ½ தேக்கரண்டி அளவு உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

1 கிராம் குங்கிலியத்தைத் தூள் செய்து, 1 டம்ளர் பாலில் கலந்து குடிக்க இருமல், மார்புச் சளி, இரத்த மூலம் கட்டுப்படும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் சீதக் கழிச்சல் குணமாக 1 கிராம் குங்கிலியப் பொடியுடன், சிறிதளவு சர்க்கரை சேர்த்து, உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

புண்கள் ஆற குங்கிலியக் களிம்பு: குங்கிலியம், மெழுகு, வகைக்கு 100 கிராம், சிறு தீயில் உருக்கி, 350 மி.லி. நல்லெண்ணெய் சேர்த்து, சூடாக இருக்கும் போதே வடிகட்டிக் கொள்ள வேண்டும். இதனைத் துணியில் தடவி, புண்கள் மீது பற்றாகப் போட வேண்டும்.

### வகைகள்

வெள்ளைக் குங்கிலியம், சிவப்புக் குங்கிலியம் மற்றும் பூனைக்கண் குங்கிலியம் என்கிற மூன்று வகைகள் உண்டு. மருத்துவப் பயன் அனைத்திற்கும் பொதுவானதே. இருப்பினும் அவற்றிற்கென்று தனித்தனியான, சிறப்பு வாய்ந்த மருத்துவப் பயன்களும் உள்ளன.

### வெள்ளைக் குங்கிலியம்

நிறம் ஏதுமின்றி இருக்கும்; உள் மூலத்தைக் கட்டுப் படுத்தும்; மாதவிலக்கைச் சீராக்கும்; மூட்டுவலிக்குச் சிறப்பான மருந்துகள் இதிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

### சிவப்புக் குங்கிலியம்

பழுப்பு வெள்ளை அல்லது மஞ்சள் அல்லது பச்சை நிறமாக இருக்கும். விஷக்கடி மருத்துவத்தில் முக்கியமாகப் பயன்படுகின்றது.

கட்டிகள், காயங்கள் போன்றவற்றைக் குணப்படுத்த, சிவப்பு குங்கிலியத்தை, 2 கிராம் அளவில் தூளாக்கி, 1 டம்ளர் பாலில் இட்டுக் கலக்கி, சரியாகும் வரை, தினமும் காலையில் குடித்துவர வேண்டும்.

### பூனைக்கண் குங்கிலியம்

உருண்டையானவை, மஞ்சள் அல்லது தங்க நிறம் கொண்டதாகவும், பூனைக்கண் போன்றும் இருக்கும். இதிலிருந்து தயாரிக்கப்படும் தைலம் வீக்கத்தைக் கரைக்கப் பயன்படுகின்றது.

– D.பமா

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## விரிவான தொகுப்பு

TNPCB

Tamil Nadu Pollution Control Board

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது நாடாளு மன்றத்தால் இயற்றப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், (1974), நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம்(1977) காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1981), மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் (1986) ஆகிய முக்கிய சட்டங்களையும், அவற்றின் கீழ் அடங்கியுள்ள விதிகளையும் செயல்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. சென்னையைத் தலைமை-யிடமாக கொண்டுள்ள இந்த வாரியத்திற்கு மாநிலம் முழுவதும் பல்வேறு கிளை அலுவலகங்கள் உள்ளன.

### வாரிய அமைப்பு

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், கொள்கை ரீதியான முடிவுகளை எடுத்து வாரியத்தின் நடவடிக்கைகளில் வழிகாட்டவும் ஒரு இயக்குநர் குழு அமைந்துள்ளது. இக்குழுவின் முழுநேர தலைவர் மாநில அரசால் நியமிக்கப்படுகிறார். அவரோடு, அரசின் உயர் அதிகாரிகள் ஐவரும், உள்ளாட்சி நிறுவனங்களின் பிரதிநி-திகளாக ஐவரும், விவசாயம், தொழில் மற்றும் மீன்வளம் ஆகிய முக்கிய பிரிவுகளை சார்ந்த மூன்று நிபுணர்களும், பொதுத் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இருவரும் மற்றும் ஒரு உறுப்பினர் செயலாளரும் இக்குழுவில் உறுப்பினர்கள் ஆவர். இவ்வாரியத்திற்கு மாவட்ட அலுவலகங்கள் 28 இடங்களில் அமைந்துள்ளன. இந்த வாரியத்தில் மொத்தம் 744 பேர் பணிபுரிகின்றனர். அதில் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள், விஞ்ஞானிகள், சட்ட நிபுணர்கள் முதலியோர் அடங்குவார்கள்.

### தொழிற்சாலை கண்காணிப்பு மற்றும் இசைவாணை வழங்குதல்

தமிழ்நாட்டில் வேகமாக பெருகிவரும் தொழில்மயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. வாரியத்தின் கள அலுவலர்கள் தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளி களில் ஆய்வு செய்து, கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங் களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர்.

தொழிற்சாலைகளால் வெளியிடப்படும் மாசு அளவினைப் பொறுத்து அவைகள் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று வகைப்படுத்தப்பட்டன. மிக அதிகளவு மாசுப்படுத்தக் கூடிய தொழிற்சாலைகள் சிவப்பு வகையிலும், குறைந்த அளவு மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் பச்சை வகையிலும் அடங்கும்.

சிவப்பு வகை அதிகளவு மாசுபடுத்தக் கூடிய தொழிற் சாலைகளைக் குறிப்பதால் அவற்றை கவனமாக கண்காணிக்க 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இவ்வகை தொழிற்சாலைகள் அடர் சிவப்பு மற்றும் சாதாரணச் சிவப்பு என்று இருவகைப்படுத்தப்பட்டுள்ளன.

### ஆய்வு மற்றும் மாதிரிகளை எடுப்பதற்கான காலவரையறை

மாவட்ட அலுவலகத்தில் உள்ள களப்பொறியாளர்கள் பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் சிவப்பு வகை தொழிற் சாலைகளை மாதம் ஒருமுறையும், சாதாரண சிவப்பு வகை தொழிற்சாலைகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற் சாலைகளை நான்கு மாதத்திற்கு ஒரு முறையும், சிறிய முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். இதைப் போன்றே பெரிய மற்றும் நடுத்தர முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறையும், சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற் சாலைகளை இரண்டு வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் பச்சை வகை தொழிற்சாலைகள் அனைத்தும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை சோதனை செய்வதன் மூலம் அத்தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவா என்பது புலனாகிறது. பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் மற்றும் சாதாரண சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மாதம் ஒரு முறை கழிவுநீர் மாதிரிகள் சோதனைக்காக சேகரிக்கப்படுகின்றது. நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறையும், சிறு முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மூன்று முதல் ஆறு மாதத்திற்கு ஒருமுறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.

பெரிய முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற் சாலைகளிலிருந்து நான்கு மாதத்திற்கு ஒருமுறையும், நடுத்தர மற்றும் சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளிலிருந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. வாரியம் நிர்ண-யித்த தர அளவிற்கு உட்பட்டு கழிவுநீரின் தன்மை இல்லாத தொழிற்சாலைகளுக்கு, திருத்த நடவடிக்கைகள் எடுக்க வாரியம் அறிவுறுத்துகின்றது. தொடர்ந்து கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்யாத தொழிற்சாலைகளுக்கு வாரியம் காரணம் கேட்டு முகாந்திரக் கடிதம் வழங்குகின்றது. இக்கடிதத்திற்கு உரிய விளக்கம் அளிக்காமலும் தொடர்ந்து கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யாமலும் வெளியேற்றும் தொழிற்சாலைகள் மீது நீர் சட்டத்தின்படி மூட உத்தரவிடுவதோடு மின் இணைப்பு துண்டிக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தொழிற்சாலைகள் மாசு தடுப்பு நடவடிக்கைகளை முறை யாக செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாசு தடுப்பு சாதனங்களின் செயல்பாடுகளை சீரிய முறையில் கண்காணித்து மாசு தடுப்பு முறைகளை முழுமை யாக நிறைவேற்றும் தொழிற்சாலைகளுக்கு குறித்த நேரத்தில் இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. உரிய நேரத்தில் இசை வாணை புதுப்பித்து வழங்குவதன் மூலம் தொழிற்சாலைகள் இசைவாணையில் குறிப்பிட்டுள்ள மாசு தடுப்பு நிபந்தனை களை கடைபிடிப்பதை வாரியம் ஊக்குவிக்கிறது.

### பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந் திருக்கும் சிறுதொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கியமாக முழுக்கவனம் செலுத்துகின்றது. சிறு தொழிற் சாலைகளுக்குப் போதிய இடவசதி மற்றும் நிதி வசதி இல்லாத காரணங்களால் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க சாத்தியமில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறு தொழிற்சாலைகளுக்குப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுவதிலும், திட்டக் கருத்துருக்களைத் தொழில் நுட்ப நுண்ணாய்வு செய்வதிலும் உதவி செய்கிறது.

### கழிவுப் பொருட்கள் மேலாண்மை

தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாக கையாளு வதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது.

### மருத்துவக் கழிவுகள் மேலாண்மை

இந்திய அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986ன் கீழ் மருத்துவக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 1998 (2000 ஆண்டில் திருத்தப்பட்டது) அறிவிக்கை செய்துள்ளது. இவ்வறிவிக்கையின்படி, மருத்துவக் கழிவுகளை களை அங்கீகரிக்கப்பட்ட முறையில் வகைப்படுத்தி, சுத்தி கரித்து முடிவு செய்யவேண்டும்.

மாநிலத்தில் உள்ள தனியார் சுகாதார பராமரிப்பு நிலையங் களுக்காக மருத்துவ கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளி யேற்றும் பொது அமைப்புகளை ஏற்படுத்த 11 இடங்கள் கண்டறியப்பட்டு, 11 பொது அமைப்புகளும் இயக்கத்தில் உள்ளன. பொது மருத்துவக்கழிவு சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதியினைக் பகுப்பாய்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### நகர திடக்கழிவுகள் மேலாண்மை

நகர மயமாதல் அதிகமாவதாலும், நகர திடக்கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும், அறிவியல் ரீதியாக திடக்கழிவுகளை மேலாண்மை செய்வது அவசரத் தேவையாகிறது. திடக்கழிவு களை ஆதாரத்திலே பிரித்து கையாளுதல், குறைத்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் மறுஉபயோகம் செய்தல் போன்ற வற்றை வாரியம் பரிந்துரைக்கிறது. வாரியம், உயிரகக் கழிவு களை உரமாக்குவதற்காக 109 நகராட்சிகளுக்கும் மற்றும் ஒரு மாநகராட்சிக்கும் தடையில்லா சான்றிதழை வழங்கியுள்ளது.

### பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகம் பெருகுவதால் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. பொதுமக்களிடையே ஒருமுறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் பெருகிவிட்டன.

இதனால் நகரத்திடக் கழிவுகளின் அளவு பெருகியதோடு மக்காத தன்மை கொண்ட பிளாஸ்டிக் பொருட்கள் சுற்றுச் சூழலுக்கு பெரும் கேட்டினை விளைவித்து வருகின்றது. இதனை கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பிளாஸ்டிக் (உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு) விதிகளை செயல்படுத்தி வருகின்றது. இவ்விதிகளின் படி 20 மைக்ரான் தடிமனுக்கு கூடுதலான தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வரும் நிதி ஆண்டில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்பவர் களை கண்டறிதல் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு விதிகளை செம்மையாக நடைமுறை படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிய ஒரு அறிக்கை-யினை தயாரித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

### மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை

மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு முயற்சிகளை எடுத்துவரு கிறது. இதன் தொடர்பாக அண்ணா பல்கலைக்கழகப் பேராசி ரியர்கள், தேசிய உலோகப் பொறியியல் ஆய்வு நிறுவனத்தின் வல்லுநர் (ழிவிலி) மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநி-திகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு மின்னணுக்கழிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. மின்னணுக் கழிவுகளைப் பிரித்து மறுசுழற்சி செய்யும் 12 தொழிற்சாலைகளுக்கு மின்னணுக் கழிவுகளை முறையாகப் பிரித்து அவற்றில் உள்ள அச்சு சுற்றுத்தகடு, ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று, இரும்பு, செம்பு, ரப்பர், கண்ணாடி முதலியவற்றை பிரித்தெடுப்பதற்கு இசைவாணை வழங்கியுள்ளது. இவற்றில் அச்சுச் சுற்றுத்தகடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று முதலியவை அமெரிக்க ஐக்கிய நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் உள்ள கன உலோகங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. மற்ற கழிவுகள் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மறுசுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன.

### காற்று மற்றும் நீரின் தன்மையை கண்காணிக்க வாரியத்தின் நடவடிக்கைகள்காற்றின் தன்மை கண்காணிப்பு

நகர்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் புகையினாலும் சுற்றுப்புறக்காற்றின் தன்மை மாசடைகிறது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்படி தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சுற்றுப்புற காற்று மண்டல கண்காணிப்புத் திட்டங்களின் கீழ் சென்னை (3 இடங்கள்), கோவை (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்), சேலம் (1 இடம்) ஆகிய இடங்களில் காற்று மண்டல கண்காணிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன.

இத்திட்டமானது மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றது. வாரியம் சென்னை மாநகரில் 5 சுற்றுப்புறக் காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இந்நிலையங்களில் சுற்றுப்புறக் காற்றின் தன்மை-யினை அந்த நகரங்களின் மக்கட் தொகை மிகுந்த குடியிருப்பு, வர்த்தகப் பகுதியில் கண்காணிக்கப்படுகின்றது. இது தவிர வாரியம் காற்று மாசு கண்காணிப்பினை தீபாவளி மற்றும் போகி பண்டிகை காலங்களில் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் மேற்கொண்டு வருகிறது. சென்னை நகரில் சுற்றுச்சூழல் காற்று கண்காணிப்புத் திட்டத்தை மேம்படுத்த கார்பன் மோனாக்ஸைடு மாசினைக் கண்டறிய 5 கார்பன் மோனாக்ஸைடு அளவிடும் கருவிகள் 25 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

மேலும் வாரியம் சுற்றுப்புற காற்றில் உள்ள ஒசோன் மாசினை அளவிடும் கருவிகளை வாங்கவும் அதன் மூலம் சென்னை, கோவை, கடலூர் ஆகிய இடங்களில் தொழிற்சாலை, வணிக பகுதிகளில் ஓசோன் மாசு குறித்து அளவிட உத்தேசித்துள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கழிவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மாசின் அளவினைக் கண்டறிய பகுப்பாய்வு செய்யப்படுகிறது

### வாகனப்புகை கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை நகரில் மூன்று இடங்களில் மாதவரத்தில் ஒன்றும் மற்றும் அம்பத்தூரில் இரண்டு இடங்களிலும் வாகனப்புகை கண்காணிப்பு நிலையங்களை அமைத்து சரக்கு போக்குவரத்து வாகனங்களுக்கு வாகனப்புகை கண்காணிப்பினை செய்து வருகிறது. வாகனங்கள் வெளியேற்றும் புகை, தரக்கட்டுப்பாட்டினை மீறும் பட்சத்தில் அதனை சரிசெய்து வாகனப்புகையினை தரக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தபிறகு வாகனங்களுக்கு புகை தரச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. சரக்கு வாகனங்கள் தவிர பிற வாகனங்களில் புகை சோதனை மேற்கொண்டு புகை தர சான்றிதழ் வழங்க வசதியாக சென்னை நகரில் 75 தனியார் புகை சோதனை நிலையங்களுக்கு அரசு போக்குவரத்து துறை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### நீரின் தன்மை கண்காணிப்பு

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் முக்கிய நோக்கமானது நீரின் முழுத்தன்மையை பேணுதல் மற்றும் சீரமைத்தல் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற நீரின் தன்மையை ஒழுங்காகக் கண்காணிப்பது அவசியமாகிறது.

எனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் காவிரி ஆற்று நீரின் தன்மையை இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு (மினார்ஸ்) திட்டத்தின் கீழ் 16 இடங்களிலும் மற்றும் புவி சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு (ஜெம்ஸ்) திட்டத்தின் கீழ் 4 இடங்களிலும் கண்காணித்து வருகின்றது. இதைத்தவிர தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை ஆறுகளின் தன்மையையும், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஏரிகளின் நீரின் தன்மையையும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டத்தின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்திற்கு டெல்லியிலுள்ள மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் நிதி உதவியளிக்கிறது.

கூடுதலாக, காவிரி, தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை நதிநீர் படுகையில் உள்ள மாசினை அளவிட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களின் மூலமாக நீர்நிலைகளின் தரத்தினை ஆய்வு செய்து வருகிறது.

### காவிரி ஆறு

காவிரி ஆற்றில் 20 இடங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. பொதுவாக காவிரி ஆற்றின் நீரின் தரம் குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், மீன்வளர்ப்பு மற்றும் வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது.

### தாமிரபரணி ஆறு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தாமிரபரணி ஆற்றின் நீரின் தன்மையை ஏழு இடங்களில் கண்காணித்து வருகின்றது. தாமிரபரணி நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது.

### பாலாறு

வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. ஆய்வறிக்கையின் புள்ளியல்படி பாலாறு நீரின் தரம் பொதுவாக குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது.

### வைகை ஆறு

வைகை ஆற்று நீரின் தன்மை திருபுவனம் நீரேற்று நிலையத்தின் நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர் மாதிரி சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. வைகை ஆற்று நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது.

### ஏரிகள்

இந்திய தேசிய நதிநீர் ஆதாரங்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரிகளில் நீர் மாதிரிகள் சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரியின் நீரின் தன்மை முறையான சுத்திகரிப்பும், அதை தொடர்ந்து கிருமிநாசினி மூலம் சுத்திகரிப்பும் செய்து குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் மீன்வளர்ப்பு, வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது.

### சென்னை மாநகர நீர்வழிக் கண்காணிப்பு திட்டம்

சென்னை மாநகரில் அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி நல்லா ஆகிய நான்கு நீர்வழித் தடங்கள் உள்ள 34 நீர் நிலைகளிலும், 24 தொழிற்சாலை கழிவு நீர் வெளியேற்ற நிலைகளிலும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது.

### வாரியத்தின் இதர முக்கிய பணிகள்

### சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒரு பகுதியான சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் 1994 ஆம் ஆண்டு தலைமை அலுவலகத்தில் துவங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள் மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும்.

### சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்க்க, சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களின்போது பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் ஒலி மற்றும் காற்று மாசு, போகி பண்டிகையின்போது பழைய பொருட்களை எரிப்பதால் ஏற்படும் காற்று மாசு, வாகனப்புகையினால் ஏற்படும் மாசு, ஓசோன் படலம் பாதுகாப்பு, திடக்கழிவு மேலாண்மை, சாலை பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு போன்ற விழிப்புணர்வு இயக்கங்கள், பயிலகங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இந்த மையம் 2008-09ஆம் ஆண்டில் 46 விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த விளம்பரப் பலகைகள், 409 அரசு பேருந்துகளின் உட்புறம் வைக்கப்பட்டுள்ளது.

### இடம் சார்ந்த சுற்றுச்சூழல் திட்டங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான இடம் சார்ந்த சுற்றுச்சூழல் திட்டங்கள் அடிப்படையில், புவியியல் தகவல் முறைகள் மேம்படுத்துதல் உள்ளிட்ட மாவட்டச் சுற்றுச்சூழல் வரைபடம், மண்டல வரைபடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டங்கள் ஆகியன தயாரிக்கும் பணிகளை 2000 - 2001 ஆம் ஆண்டு முதல் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரிய உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

இதன் மூலமாக கோயம்புத்தூர், வேலூர், தூத்துக்குடி, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், ஈரோடு, சேலம், கரூர், மதுரை, நாமக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட சுற்றுச்சூழல் வரைபடமும் மற்றும் சென்னை மாநகருக்கானச் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### பசுமை போர்வை திட்டம்

மாசினைத் தடுக்கும் வழிமுறையாக, தொழிற்சாலைகள் தங்களது வளாகத்தில் 25 சதவீதம் நிலப்பரப்பில் அடர்த்தியான மரங்களை வளர்க்க வலியுறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, தொழிற்சாலைகள் போதிய அளவு மரங்களைத் தங்களது வளாகத்திலும் மற்றும் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன.

### தூய்மையான தொழில் நுட்பங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகள் கழிவுநீரைச் சுத்திகரிக்க மேற்கொள்ள செய்வது மட்டுமன்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்த தூய்மையான தொழில் நுட்பத் திறனை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளது. வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், பி.பி.சி சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30% வரை எரிசாம்பலை பயன்படுத்துதல், கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில் நுட்பத்தை செயல்படுத்துதல், சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்கு பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக்கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன.

மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ - குளோரைட்ஸ் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனைச் சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி வருகின்றன.

### நூலகம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நூலகம் 1989-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் 10,301 புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட 79 இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), 9 செய்தி மடல்கள், 13 மாத இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து ஈடுபடும் அனைவரும் இதில் உறுப்பினராகலாம்.

### செய்தி மடல்

வாரியத்தின் செயல்பாடுகள், ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய சுற்றுச்சூழல் சம்பந்தமான செய்திகள், சுற்றுச்சூழல் சம்பந்தமான கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய செய்திமடல் ஒன்றை வாரியம் ஒவ்வொரு காலாண்டிற்கும் வெளியிட்டுவருகின்றது. இந்த செய்திமடல் அரசு துறை அலுவலகங்களுக்கும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் அனைத்து மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது.

### நிறுவனத்தை வலுப்படுத்துதல் மற்றும் திறனை மேம்படுத்துதல்

வாரியத்தின் உள்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும் பொருட்டு வாரியத்திற்குச் சொந்தமாக தலைமை அலுவலக கட்டிடம் கிண்டியில் கட்டப்பட்டதுடன், மாவட்ட அலுவலகங்களுக்கு அம்பத்தூர், ஒசூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் கட்டிடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

- ராதிகா

# பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை தீவிரமாக செயல்படுத்துக:



## – அன்புமணி ராமதாஸ்

தமிழகத்தில் பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை மிகக் கடுமையாக செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பெரும்பான்மையான மாவட்டங்களில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்து வருவதாக ஆய்வில் தெரியவந்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. இதற்கு பொது இடங்களில் புகைப் பிடிப்பது தான் காரணம் என்று மருத்துவர்கள் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், பொது இடங்களில் புகைப்பதைத் தடுக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

சென்னை அடையாறு புற்றுநோய் நிறுவனம் வெளியிட்டுள்ள 2019&ஆம் ஆண்டின் தமிழ்நாடு புற்றுநோய் பதிவேட்டுத் திட்டத்திற்கான அறிக்கையில் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 3500 முதல் 4000 பேருக்கு நுரையீரல் புற்றுநோய் கண்டறியப்படுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதில் அதிர்ச்சியளிக்கும் உண்மை என்னவென்றால், புகைப்பழக்கம் உள்ளவர்களை மட்டும் தான் நுரையீரல் புற்றுநோய் தாக்கும் என்ற பொதுவான எண்ணத்திற்கு மாறாக, வாழ்நாளில் இதுவரை ஒருமுறை கூட புகைப் பிடிக்காதவர்களும், பெண்களும் கூட நுரையீரல் புற்றுநோய் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது தான் என்று அந்த ஆராய்ச்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நுரையீரல் புற்றுநோய் பாதிப்பு சென்னை மாவட்டத்தில் தான் மிக அதிகமாக இருக்கிறது. சென்னையில் வாழும் ஒரு லட்சம் பேரில் 8.1 பேர் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர். இந்த வரிசையில் கன்னியாகுமரி மாவட்டம் லட்சத்திற்கு 7.3 பேர் என்ற அளவுடன் இரண்டாவது இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் 6.5 பேருடன் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ள நிலையில், சென்னையை ஒட்டியுள்ள திருவள்ளூர் மாவட்டம் 6.4 பேருடனும், காஞ்சிபுரம் மாவட்டம் (இப்போதைய செங்கல்பட்டு மாவட்டத்தையும்

உள்ளடக்கியது) 6.1 பேருடனும் முறையே 4 மற்றும் 5 ஆம் இடத்தை பிடித்திருக்கின்றன.

சுற்றுச்சூழல் பாதிப்புகள், வேதித் தொழிற்சாலைகளில் வெளிவரும் நச்சுப் பொருட்கள் காற்றில் கலப்பது என பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் முதன்மைக் காரணம் பொது இடங்களில் புகைப்பிடிப்பதை தடை செய்யும் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாதது தான் என்று அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் புகையிலை கட்டுப்பாட்டு வள மையத் தலைவரும், புற்றுநோய் மருத்துவருமான சுரேந்திரன் தெரி-வித்திருக்கிறார்.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சராக நான் பதவி வகித்த போது, பொது இடங்களில் புகைப் பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை கடுமையான எதிர்ப்புகளையும் மீறி 2008&ஆம் ஆண்டு அக்டோபர் 2&ஆம் தேதி முதல், எந்த நோக்கத்திற்காக செயல்படுத்தினேனோ, அந்த நோக்கம் முற்றிலும் சிதைக்கப்பட்டிருப்பது வேதனையளிக்கிறது. சமூக அக்கறை சிறிதும் இல்லாமல் பொது இடங்களில் புகைப்பிடிப்பவர் விடும் புகையை சுவாசிப்பதால் அப்பாவி மக்கள், குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத் தான், பல ஆண்டுகள் போராடி அந்த சட்டத்தைக் கொண்டு வந்தேன்.

அந்த சட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளுக்குத் தான் உள்ளது. ஆனால், தமிழ்நாடு உள்ளிட்ட எந்த மாநில அரசும் அந்த சட்டத்தை முறையாக பயன்படுத்தத் தவறியதன் விளைவு தான் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பலர் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்நாட்டில் அதிர்ச்சியளிக்கும் வகையில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்திருப்பதற்கு 2008&ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அரசுகள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

பொது இடங்களில் புகைப்பிடிப்பதை தடை செய்யும் சட்டம் 2008&ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், அன்றிலிருந்து கடந்த மார்ச் 31&ஆம் நாள் வரை-யிலான பதினைந்தரை ஆண்டுகளில் 3.89 லட்சம் பேர் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.6.83 கோடி அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.




அதாவது தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு வெறும் 68 பேர் மட்டும் தான் பொது இடங்களில் புகைப்பிடித்ததாகக் கூறி அவர்கள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது; அவர்களில் ஒவ்வொருவரிடமிருந்து சராசரியாக ரூ.177 மட்டும் தான் தண்டமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதில் இருந்தே இச்சட்டம் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு அலட்சியமாக செயல்படுத்தப்படுகிறது என்பதை உணரலாம்.

இந்தியாவில் புகை பிடிப்பதால் ஆண்டுக்கு 13.20 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். பிறர் பிடித்து விடும் புகையை சுவாசிப்பதால் ஆண்டுக்கு 2.20 லட்சம் பேர் இறக்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்படுபவர்களில் பெரும்பான்மையினர் பெண்கள். பொது இடங்களில் புகைப்பதை அனுமதிப்பதால் ஏற்படும் பெருங்கேடு இது என்பதால் தான் அதைத் தடுக்கும் வகையில் 2008-ஆம் ஆண்டு சட்டத்தைக் கொண்டு வந்தேன். ஆனால், அதை செயல்படுத்துவதில் தமிழக அரசு படுதோல்வி அடைந்திருப்பதை மன்னிக்கவே முடியாது.

பொது இடங்களில் புகைப் பிடிப்பதை தமிழக அரசு தடுக்கத் தவறியதால் தான், பெண்களும், குழந்தைகளும் நுரையீரல் புற்று நோய்க்கு ஆளாகின்றனர். அலட்சியம், செயலற்ற தன்மை போன்ற தமிழ்நாடு அரசின் குற்றத்திற்கு அப்பாவி மக்கள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்? இனியும் இந்தக் கொடுமை நீடிக்கக் கூடாது. எனவே, தமிழ்நாட்டின் பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை மிகக் கடுமையாக செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

- ந.மதிவாணன்




# பாரதியாரின் படைப்புகளின் தொகுப்பு!

# வெளியிட்டார் பிரதமர் மோடி!

பாரதியாரின் பிறந்த நாள் 11.12.2024 அன்று அவரது படைப்புகளின் முழு தொகுப்பை பிரதமர் நரேந்திர மோடி அவரது இல்லத்தில் வெளியிட்டார்.

சிறந்த தமிழ்க் கவிஞரும், சுதந்திரப் போராட்ட வீரருமான சுப்பிரமணிய பாரதியின் முழுமையான படைப்புகளின் தொகுப்பை இன்று பிற்பகல் 1 மணியளவில் தில்லியில் உள்ள பிரதமர் இல்லத்தில் மோடி வெளியிடுகிறார். சுப்பிரமணிய பாரதியின் எழுத்துக்கள் மக்களிடையே தேசபக்தியை ஊட்டியது. இந்திய கலாசாரம் மற்றும் நாட்டின் ஆன்மிக பாரம்பரியத்தின் சாரத்தை வெகுஜன மக்கள் தொடர்புபடுத்தக்கூடிய மொழியில் மக்களிடம் அவர் எடுத்துச் சென்றார்.

மகாகவியின் முழுமையான படைப்புகளின் 23 தொகுதிகள் சீனி. விசுவநாதனால் தொகுக்கப்பட்டு அல்லயன்ஸ் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதில் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் எழுத்துகளின் பதிப்புகள், விளக்கங்கள், ஆவணங்கள், பின்னணித் தகவல்கள் மற்றும் தத்துவ விளக்கங்கள் போன்றவை அடக்கம்" என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி மத்திய கலாச்சாரத் துறையின் கீழான சாகித்ய அகாடமி சார்பில் நடைபெறுகிறது. இந்நூலை சீனி விஸ்வநாதன் தொகுத்திருக்கிறார்.

இந்த தொகுப்பில் சுப்பிரமணிய பாரதியின் எழுத்துக்களின் பதிப்புகள், விளக்கங்கள், ஆவணங்கள், பின்னணி தகவல்கள் மற்றும் தத்துவ விளக்கக் காட்சி போன்ற விவரங்கள் உள்ளன. முதன்முறையாக பாரதியாரின் இந்த தொகுதிகள் நூல்களாக வெளியிடப்படுகின்றன. தமிழகத்தின் 123 ஆண்டுகள் பழமையான அலையன்ஸ் நிறுவனம் இதை வெளிட்டது. இந்த நிறுவனம் பாரதியாருடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததாக கூறப்படுகிறது.

பின்னர் பேசிய பிரதமர் மோடி:-

தமிழ்ப்பெரும் கவிஞரும் சுதந்திர போராட்ட வீரருமான பாரதியாரின் பிறந்தநாளை இன்று நாடு கொண்டாடுகிறது. பாரதியாருக்கு எனது இதய அஞ் சலியை தெரிவித்து கொள்கிறேன். பாரதியின் நூல் தொகுப்பை வெளியிடுவதில் மிகவும் பெருமிதம் கொள்கிறேன். வளமான இந்தியாவுக்கான பாரதியின் தொலைநோக்கு பார்வை பல தலைமுறைகளை கடந்து ஊக்கமளிக்கும் என அவர் கூறினார்.

– சிவசங்கர்




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 09.12.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில் 559 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள்எஸ்.சுதர்சனம், தாயகம்கவி,எஸ்.அரவிந்த்ரமேஷ், ஆர்.டி.சேகர், த.வேலு, இ.பரந்தாமன், டாக்டர்.நா.எழிலன், ஆர்.மூர்த்தி, ஆ.வெற்றிஅழகன், ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, கா.கணபதி, ஜோசப்சாமுவேல், துணைமேயர் மு. மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன்.இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன்.இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டல குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

– R.ஹரிகிருஷ்ணன்



PROPSERV
Property Related Allied & Legal services

★ REGISTRATION
★ PATTA
★ GIRAMA NATHAM
★ CMDA APPROVAL
★ BUILDING PLAN
★ NAME TRANSFER
★ SETTLEMENT
★ LEGAL HEIR CERTIFICATE
★ CORPORATION TAXES
★ LAND CEILING
★ SLUM BOARD
★ HOUSING BOARD
★ PROPERTY IDENTIFICATION
★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com




# சென்னை சர்வதேச திரைப்பட விழா

22வது சென்னை திரைப்பட விழா வரும் 19ஆம் தேதி வரை நடைபெற இருக்கும் நிலையில், மொத்தம் 25 தமிழ் படங்கள் திரையிடப்படவுள்ளன. சென்னையில் மூன்று திரையரங்குகளில் அனைத்து படங்களும் திரையிடபடுகின்றன.

இந்திய சர்வதேச திரைப்பட விழா ஆண்டுதோறும் கோவாவில் நடைபெறும். அந்த வகையில் இந்த ஆண்டுக்கான திரைப்பட விழா கடந்த மாதம் 20 முதல் 28 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

இதைத்தொடர்ந்து இந்தியாவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்களில் முக்கியமானதாக கருதப்படும் சென்னை திரைப்பட விழா இந்த மாதம் நடைபெற இருக்கிறது. இதுகுறித்து அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## சென்னை திரைப்பட விழா

தமிழ்நாடு அரசு ஆதரவுடன், சென்னை இந்தோ சினி அப்ரிசியேஷன் ஃபவுண்டேஷன் சார்ப்பில் 22வது சென்னை திரைப்பட விழா டிசம்பர் 12 முதல் 19ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. அதன்படி சென்னை திரைப்பட விழா வரும் 12ஆம் தேதி பிவிஆர் சத்யம் திரையரங்கில் தொடங்குகிறது.

தொடக்க விழாவில், வெனிஸ் பட விழாவில், கோல்டன் லயன் விருதுபெற்ற 'தி ரூம் நெக்ஸ்ட் டோர்' (The Room Next Door) என்ற படம் திரையிடப்படுகிறது. இறுதி நாளான 19ஆம் தேதி, கேன்ஸ் விழாவில் தங்கப்பனை விருது பெற்ற 'அனோரா' (Anora) படம் திரையிடப்படுகிறது.

மொத்தம் 50 நாடுகளிலிருந்து 123 படங்கள் திரையிடப்படுகின்றன. இதில் கேன்ஸ் விழாவில் விருதுபெற்ற மற்றும் பரிந்துரைக்கப்பட்ட 11 திரைப்படங்கள், வெனிஸ் விழாவில் விருது வாங்கிய 3 படங்கள், பெர்லின் விழாவில் வெற்றிபெற்ற மற்றும் பங்கேற்ற 8 திரைப்படங்களும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன், உலக சினிமா பிரிவில் சந்தோஷ் சிவன் தலைமையிலான குழு தேர்வு செய்யும் 12 படங்கள் திரையிடப்படுகின்றன. இந்திய பனோரமா பிரிவில் 16 படங்களும், தேசிய திரைப்பட மேம்பாட்டு நிறுவனத்தின் 6 படங்களும் எம்.ஜி.ஆர் திரைப்பட மற்றும் தொலைக் காட்சித் தொழில் நுட்ப மாணவர்களின் 10 குறும்படங்களும் திரையிடப்படுகின்றன.

## மொத்தம் 25 தமிழ் படங்கள்

இந்த திரைப்படவிழாவில் மொத்தம் 25 தமிழ் படங்கள் திரையிடப்படவுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

- அமரன்
- போட்
- புஜ்ஜி அட் அனுப்பட்டி (Bujji at anupatti)
- செவப்பி
- ஜமா
- கொட்டுக்காளி
- கோழிப்பண்ணை செல்லத்துரை
- லப்பர் பந்து
- மகாராஜா
- மெய்யழகன்
- நந்தன்
- ரசவாதி
- தங்கலான்
- வாழை
- வெப்பம் குளிர் மழை
- வேட்டையன்
- அயலி
- டிமாண்டி காலனி 2



- கருடன்
- ஹாட்ஸ்பாட் (Hotspot)
- லாக்டவுன் (Lockdown)
- நீல நிற சூரியன்
- பார்க்கிங்
- டீன்ஸ்
- வல்லவன் வகுத்ததடா

இந்த படங்களுடன், மலையாளத்தில் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்ற ஆடுஜீவிதம், ஏஆர்எம், பிரம்மயுகம், கிஷ்கிந்தா காண்டம் மற்றும் தெலுங்கில் ஹாய் நானா போன்ற படங்களும் திரையிடப்படவுள்ளன.

### மாஸ்டர் டாக்ஸ் நிகழ்ச்சி

இந்தப் திரைப்பட விழாவில் 'மாஸ்டர் டாக்ஸ்' என்ற நிகழ்ச்சி அறிமுகப்படுத்துகிறது. திரைப் படங்கள் திரையிடப்பட்டு அந்த படங்களின் இயக்குநர்களுடன் உரையாடல் நடக்கும். படங்கள் அனைத்தும் சென்னை பிவிஆர் சத்யம், ஐநாக்ஸ் திரையரங்குகளில் மட்டும் திரையிடப்படும். இதில், திரையிடப்படும் சிறந்த 12 தமிழ்ப்படங்களை ஜூரிகள் தேர்வு செய்து வருகிறார்கள். தமிழ்த் திரைப்படப் போட்டி மற்றும் உலக திரைப்பட போட்டிக்கான விருதுகள், நிறைவு நாளில் அறிவிக்கப்படும்.

இன்னும் சில ஆண்டுகளில் சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவை, கேன்ஸ் உள்ளிட்ட வெளிநாட்டுப் பட விழாக்களைப் போல செயல் படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்த பட விழா தொடர்பான மேலும் விவரங்களுக்கு https://chennaifilmfest.com என்ற இணைய முகவரியை தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### தமிழக அரசு சார்பில் ரூ.85 லட்சம் நிதியுதவி

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 09.12.2024 அன்று தலைமை செயலகத்தில் 12.12.2024 முதல் 19.12.2024 வரை சென்னையில் நடைபெறும் 22வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.85 லட்சத்திற்கான காசோலையை வழங் கினார். தமிழ்நாடு அரசின் சார்பில், ஆண்டுதோறும் சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.75 லட்சம் நிதயுதவி வழங்கப்பட்டு வந்த நிலையில், 2023ம் ஆண்டு ரூ.85 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

இந்த ஆண்டும் 12.12.2024 முதல் 19.12.2024 வரை சென்னையில் நடைபெறும் 22வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.85 லட்சத்திற்கான காசோலையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று இந்திய திரைப்பட திறனாய்வு கழகத்தின் பொதுச்செயலாளரும், சென்னை சர்வதேச திரைப்பட விழா இயக்குநருமான ஏ.வி.எம்.சண்முகத்திடம் வழங்கினார்.

அப்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்பு துறையின் கூடுதல் இயக்குநர் அன்புச்சோழன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ், இந்திய திரைப்பட திறனாய்வு கழகத்தின் தலைவர் சிவன் கண்ணன் மற்றும் துணைத்தலைவர் ஆனந்த் ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

– P.கார்த்திகேயன்



# மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம்: எதிர்ப்பு ஏன்?

மதுரை மாவட்டம் மேலூரில் டங்ஸ்டன் கனிமம் எடுப்பதற்கு ஆய்வுடன் இணைந்த சுரங்க குத்தகை உரிமம் வழங்குவதற்கு கடந்த ஜூலை 24ஆம் தேதி, மத்திய சுரங்கத் துறை அமைச்சகம் ஏல அறிவிப்பை வெளியிட்டது.

கடந்த நவம்பர் 7ஆம் தேதி வேதாந்தாவின் துணை நிறுவனமான இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் (Hindustan Zinc) நிறுவனத்தைத் தகுதியான நிறுவனமாக மத்திய சுரங்க அமைச்சகம் தேர்வு செய்தது.

இதுதொடர்பாக, மத்திய சுரங்க அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், சுரங்கம், கனிம மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை சட்டம் 1957-ன் படி ஏலம் நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

ஆந்திரா மாநிலம் பாலேபாளையம் மற்றும் தமிழ்நாட்டில் மதுரை நாயக்கர்பட்டியில் டங்ஸ்டன் கனிமம் எடுக்கப்பட உள்ளதாகவும் மத்திய அரசின் அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

அதன்படி, மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் உள்ள நாயக்கர்பட்டி கிராமத்தில் 2,015.51 ஹெக்டேர் பரப்பில் டங்கஸ்டன் சுரங்கம் அமைய உள்ளதாக சுரங்க அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்திய நிலவியல் ஆய்வு நிறுவனத்தின் தமிழ்நாடு-புதுச்சேரி அலுவலகம், கடந்த 2018-19ஆம் ஆண்டில் மேலூர் தாலுகாவில் உள்ள எட்டிமங்கலம், அரிட்டாபட்டி, நாயக்கர்பட்டி ஆகிய இடங்களில் ஆய்வு நடத்தியதாகவும் அதை அடிப்படையாகக் கொண்டு ஏலம் விடப்பட்டதாகவும் மத்திய அரசின் அறிக்கை கூறுகிறது.

மத்திய அரசின் ஏல அறிவிப்புக்கு தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். 'டங்ஸ்டன் சுரங்கம் அமைந்தால் பல்லுயிர்ப் பெருக்க மண்டலமாக உள்ள அரிட்டாபட்டி அழியும்' என்றொரு கருத்து முன்வைக்கப்படுகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம்,

மேலூரில் அரிட்டாபட்டியை உள்ளடக்கிய பகுதிகளை தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர்ப் பெருக்க பாரம்பரிய தலமாக (Biodiversity Heritage Site) மாநில அரசு அறிவித்தது.

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் இந்த அரசாணையை வெளியிட்டுள்ளது. அதில், 'தமிழில் கல்வெட்டுகள், சமணர் படுக்கைகள், 2,200 ஆண்டுகள் பழமையான குடைவரைக் கோவில்கள், ஏழு சிறு குன்றுகளைத் தொடர்ச்சியாக இப்பகுதி கொண்டுள்ளதாக" கூறப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் 72 ஏரிகள், 200 இயற்கை நீரூற்றுக் குளங்கள் மற்றும் 3 தடுப்பணைகள் உள்ளதாகவும் வெள்ளை வல்லூறு, செம்மார்பு வல்லூறு, பாம்புண்ணிக் கழுகு உள்பட 250 பறவைகளும், அலங்கு, மலைப் பாம்பு, தேவாங்கு போன்ற உயிரினங்களும் வாழ்வதாக அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

சுரங்க அமைச்சகத்தின் அறிவிப்புப்படி, இங்குள்ள கழிஞ்ச மலை, நாட்டார் மலை, ராமாயி மலை, அகப்பட்டான் மலை, கழுகு மலை, தேன்கூடு மலை ஆகியவை டங்ஸ்டன் கனிமத் தொகுதிக்குள் வருவதாகக் கூறுகிறார், 'பூவுலகின் நண்பர்கள்' எனும் சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோ.சுந்தர்ராஜன்.

"சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதியில் சுரங்கம் அமைக்கப்பட்டால் இயற்கை நீர் சுனைகள் அழிந்து போகும்' என அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார், ஆளும் திமுகவின் கூட்டணியில் உள்ள ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ.

மத்திய சுரங்க அமைச்சகத்தின் அறிவிப்பு வெளியான நாளில் இருந்தே டங்ஸ்டன் கனிமத் திட்டத்துக்கு எதிராக சூழல் அமைப்புகள் போராட்டத்தை அறிவித்தன.

### தமிழ்நாடு அரசின் விளக்கம்

இந்த நிலையில், 'டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைப்பதற்கு மாநில அரசு அனுமதி அளிக்கவில்லை' என தமிழ்நாடு அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'மத்திய அரசால் மதுரை, மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி



கிராமத்தில் டங்ஸ்டன் கனிமத்திற்கு ஆய்வுடன் இணைந்த சுரங்கக் குத்தகை உரிமம் வழங்க ஏல அறிவிப்பு செய்யப்பட்டது.

கடந்த நவம்பர் 7ஆம் தேதி, இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தைத் தகுதியான நிறுவனமாக சுரங்க அமைச்சகம் தேர்வு செய்துள்ளது. இதுதொடர்பாக, அந்நிறுவனத்திடம் இருந்து தமிழ்நாடு அரசு எந்த விண்ணப்பமும் பெறவில்லை; அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை' எனத் தெரிவித்துள்ளது.

இதே கருத்தைக் கடந்த 21ஆம் தேதி செய்தியாளர்களிடம் கூறிய வனத்துறை அமைச்சர் பொன்முடி, "டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பம் வரவில்லை. அப்படியே அனுமதி கேட்டு வந்தாலும் அதை நிராகரிப்போம்," என்றார்.

மத்திய அரசு அனுமதி அளித்திருந்தால் அதை ரத்து செய்வதற்கு அரசு வலியுறுத்தும் எனவும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

மாநில அரசு விளக்கம் கொடுத்தாலும் மதுரையில் கள நிலவரம் வேறாக உள்ளது. டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதற்கு மேலூர் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

செவ்வாயன்று (நவம்பர் 26) மதுரை அழகர் கோவிலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் ஒன்று கூடி, இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

தொடர்ந்து, வெள்ளியன்று (நவம்பர் 29) மேலூரில் கடை அடைப்புப் போராட்டத்தை

நடத்த உள்ளதாகவும், முல்லைப் பெரியாறு ஒருபோக பாசன விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

சுரங்க ஏலத்துக்கு எதிராக, 30 கிராம சபைகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கூறினார், டங்ஸ்டன் கனிமத் திட்ட எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கம்பூர் செல்வராஜ்.



இதுதொடர்பாக, கம்பூர் ஊராட்சி மன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில், 'டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு எந்த அனுமதியும் அளிக்கக் கூடாது. இதுதொடர்பாக சட்டப் பேரவையில் சிறப்புக் கொள்கை முடிவெடுத்து அறிவிக்க வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் என்னென்ன கனிமம் உள்ளது என்பதை மத்திய சுரங்கத்துறை ஆவணப்படுத்தியுள்ளதாகக் கூறும் செல்வராஜ், "மதுரை மாவட்டத்தில் இரண்டு பகுதிகளை டங்ஸ்டன் சுரங்கத்துக்காகத் தேர்வு செய்துள்ளதாக" கூறுகிறார்.

"மீனாட்சிபுரத்தில் இருந்து சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வரை உள்ள 200 சதுர கி.மீட்டரில் பல்வேறு காலகட்டங்களில் சுரங்கத்துறை ஆய்வு நடத்தியுள்ளது. இதற்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்" என்றார்.

### பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்

இந்நிலையில், டங்ஸ்டன் உரிமையை ரத்து செய்யக் கோரி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோதிக்கு வெள்ளிக்கிழமை (நவ. 29) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இவ்விவகாரத்தில் பிரதமர் மோதி உடனடியாக தலையிட்டு, மத்திய அரசு வழங்கியுள்ள உரிமத்தை ரத்து செய்திட வேண்டும் என, மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அதில், "இதுபோன்ற முக்கியமான கனிமங்களின் சுரங்க உரிமைகளை மத்திய அரசு ஏலம் விடுவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நீர்வளத்துறை அமைச்சரின் 3-10-2023ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலமாக ஏற்கனவே மத்திய அரசுக்குத் தெரிவித்திருந்த நிலையில், துரதிர்ஷ்டவசமாக மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள், நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர், தனது 2-11-2023 நாளிட்ட கடிதத்தில் நாட்டின் நலன்களுக்காக, சுரங்க அமைச்சகத்தின் முக்கியமான கனிமங்களை ஏலம் விடுவதைத் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டு, தமிழ்நாடு அரசின் கோரிக்கையை நிராகரித்திருந்தார்" என குறிப்பிட்டுள்ளார்.

சுரங்க ஏலம் அமையவுள்ள கிராமங்களின் பல்லுயிர்ப் பெருக்க வரலாற்று முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியுள்ள ஸ்டாலின், அப்பகுதியில் எந்தவொரு சுரங்க நடவடிக்கை மேற்கொண்டாலும், அது ஈடுசெய்ய முடியாத அளவுக்கு சேதங்களை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார் ஸ்டாலின்.

மக்களின் வாழ்வாதார பாதிப்புகள் குறித்து குறிப்பிட்டுள்ள ஸ்டாலின், இதுபோன்ற சுரங்கத் தொழிலை இந்தப் பகுதிகளில் தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என உறுதி தெரிவித்துள்ளார்.

இந்த சுரங்க அனுமதியை ரத்து செய்யுமாறு மத்திய சுரங்கத் துறை அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும் சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியின்றி சுரங்கம் தோண்டுவதற்கான ஏலங்களை மேற்கொள்ளக் கூடாது என்றும் சுரங்க அமைச்சகத்திற்கு அறிவுறுத்துமாறும் ஸ்டாலின் பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளார்.

### 'டங்ஸ்டன் திட்டம் நடந்தால் நான் பதவில் இருக்க மாட்டேன்' - சட்டமன்றத்தில் முதல்வர் ஸ்டாலின்

'சுரங்கத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பம் வந்தால் ஏற்க மாட்டோம்' என தமிழ்நாடு அரசு ஏற்கனவே தெரிவித்திருந்தது. இந்நிலையில் டங்ஸ்டன் திட்டம் வந்தால் பதவியில் இருக்க மாட்டேன் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

– K.மாரிதுரை



# யானை - மனித மோதலை தடுக்க குடியிருப்புகளில் வாழை பயிரிடக்கூடாது:

## தேயிலை தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தல்!

தமிழக - கேரள எல்லையில் வால்பாறை நகரம் அமைந்துள்ளது. தமிழகத்தின் புகழ் பெற்ற சுற்றுலா தலமாக இந்த நகரம் உள்ளதால், மாநிலம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில், வால்பாறை, மானாம்பள்ளி ஆகிய இரு வனச்சரகங்களில், சமீபகாலமாக யானைகள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக, தென்மேற்கு பருவமழைக்கு பின்னர், வால்பாறையில் உள்ள பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் யானைகள் தனித்தனி கூட்டமாக முகாமிட்டுள்ளன. பகல் நேரத்தில் தேயிலை தோட்டத்தில் முகாமிடுவதால், தொழிலாளர்களின் தேயிலை பறிக்கும் பணி பாதிக்கப்படுகிறது.

இரவு நேரத்தில் தொழிலாளர் குடியிருப்பு பகுதிக்குள் நுழையும் யானைகள், அங்கு பயிரிடப்பட்டுள்ள வாழை, பலா, கொய்யா ஆகியவற்றை உட்கொள்கின் றனர். சில நேரங்களில் தேயிலை தோட்ட பகுதியில் உள்ள வீடு மற்றும் மளிகை, ரேஷன் கடைகளையும் இடித்து சேதப்படுத்துகின்றன. இதனால், வால்பாறையில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்து வரு கின்றனர். இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பொதுமக்கள், தோட்டத் தொழிலாளர் சங்கத்தினர் வனத்துறை-யினரை யும், தமிழக அரசையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

எஸ்டேட் நிர்வாகத்துக்கு நோட்டீஸ்: இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, ''வனத்துறையின் தீவிர நடவடிக்கையால், சமீப காலமாக யானை - மனித மோதல் வெகுவாகக் குறைந்துள்ளது. யானைகள் நடமாடும் பகுதி குறித்து சம்பந்தப்பட்ட எஸ்டேட் தொழிலாளர்களுக்கு 'வாட்ஸ் அப்' வா-யிலாக முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்படுகிறது. இரவு நேரங்களில், தொழிலாளர் குடியிருப்பு பகுதிக்குள் யானைகள் நுழையாமல் இருக்க, அங்கு வாழை பயிரிடுவதை தொழிலாளர்கள் தவிர்க்கவேண்டும். இதுகுறித்து அனைத்து எஸ்டேட் நிர்வாகத்துக்கும் ஏற்கெனவே நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், யானைக்கு மிகவும் பிடித்தமான அரிசியை தொழிலாளர்கள் தகுந்த பாதுகாப்புடன் வைக்க வேண்டும். யானைகளால் ஏற்படும் சேதங்களை தவிர்க்க, தொழிலாளர்கள் விழிப்புணர்வு டன் நடந்து கொள்ள வேண்டும்'' என்றனர்.

இதுகுறித்து இயற்கை ஆர்வலர்கள் கூறும்போது, ''ஆனைமலை புலிகள் காப்பகத்தில், வால்பாறை, மானாம்பள்ளி ஆகிய இரு வனச் சரகங்களில் வனத்துறை மற்றும் வருவாய்த் துறைநிலங்களில் யானைகள் வழித்தடம் அமைந்துள்ளது. இந்த வழித்தடங்களை மறித்து அனுமதி இன்றி தங்கும் விடுதிகள், கட்டிடங்கள், ரிசார்ட்கள் கட்டப்பட்டுள்ளன. இதனால் தண்ணீர் மற்றும் உணவுக்காக இடம் பெயரும் யானைகள், வழிமாறி சென்று குடியிருப்பு பகுதியிலும், தேயிலை தோட்டத்திலும் முகாமிடுகின்றன. வனவிலங்கு - மனித மோதல்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. வால்பாறையில் யானைகளை பாதுகாக்கும் வகையிலும், இங்குள்ள இயற்கையை பாதுகாக்கும் வகையிலும், யானைகள் வழித்தடத்தில் கட்டப்பட்டு உள்ள தங்கும் விடுதிகளை அதிகாரிகள் உடனே ஆய்வு செய்து அகற்ற வேண்டும்'' என்றனர்.

- M.திலிப்குமார்

# காடுகளை உறுவாக்க உதவும்

# ஜாகுவார்!

இந்த அற்புதமான உயிரினங்களின் அவலநிலை மற்றும் அவற்றின் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நவம்பர் 29, சர்வதேச ஜாகுவார் தினத்திற்கான உங்கள் காலெண்டர்களைக் குறிக்கவும்.

ஒரு உயர்மட்ட மாமிச உண்ணியாக, இந்த பெரிய பூனை இரையின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் மற்ற சிறிய மாமிச உண்ணிகளுடன் போட்டியிடுவதன் மூலமும் சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிக்க உதவுகிறது. ஜாகுவார் மனித கலாச்சாரத்திலும் முக்கியமானது, பழங்குடி மக்களின் கதைகள், பாடல்கள் மற்றும் பிரார்த்தனைகளில் அடிக்கடி முக்கிய பங்கு வகிக்கிறது.


ஜாகுவார் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் நவம்பர் 29 அன்று சர்வதேச ஜாகுவார் தினம் கொண்டாடப்படுகிறது. ஜாகுவார் அமெரிக்காவின் மிகப்பெரிய காட்டுப் பூனைகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பின் முக்கிய பகுதியாகும். அவை பல பழங்குடி மக்களுக்கு கலாச்சார பாரம்பரியத்தின் சின்னமாகவும் உள்ளன.

ஜாகுவார்கள் உணவுச் சங்கிலியின் உச்சியில் உள்ளன. ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பராமரிக்க உதவுவதிலும் அவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஜாகுவார் விதைகளை சிதறடித்து காடுகளை மீண்டும் உருவாக்க உதவுகிறது.

வாழ்விடம் இழப்பு, வேட்டையாடுதல் மற்றும் வேட்டையாடுதல் ஆகியவற்றால் ஜாகுவார் அச்சுறுத்தப்படுகிறது. வாழ்விடம் இழப்பு ஜாகுவார்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. விவசாயம் மற்றும் வளர்ச்சிக்காக காடுகள் அழிக்கப்பட்டதால், ஜாகுவார் தங்கள் வீடுகளையும் வேட்டையாடும் இடங்களையும் இழக்கிறது. பாரம்பரிய மருத்துவம் மற்றும் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ரோமங்கள் மற்றும் உடல் பாகங்களுக்காகவும் ஜாகுவார் வேட்டையாடப்படுகிறது.

ஜாகுவார்களுக்கு முதன்மையான அச்சுறுத்தல் காடழிப்பு மற்றும் மனித குடியிருப்புகளின் ஆக்கிரமிப்பால் உந்தப்பட்டு, அவற்றின் வாழ்விடத்தை இடைவிடாமல் அழிப்பதாகும். ஒரு காலத்தில் பரந்து விரிந்த காடுகள், உயிர்களால் நிரம்பி வழிகின்றன, இப்போது துண்டு துண்டாக மற்றும் குறைந்து வருகின்றன, ஜாகுவார் தனிமைப்படுத்தப்பட்டு, அவை செழிக்கத் தேவையான வளங்கள் இல்லாமல் உள்ளன.

சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகத்தால் தூண்டப்பட்ட வேட்டையாடுதல், ஜாகுவார் எதிர்கொள்ளும் சவால்களை மேலும் கூட்டுகிறது. அவர்களின் அற்புதமான கோட்டுகள் நீண்ட காலமாக விரும்பப்படுகின்றன, மேலும் அவர்களின் பற்கள் மற்றும் எலும்புகள் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்த அதிகளவில் தேடப்படுகின்றன. இந்த இடைவிடாத நாட்டம் ஜாகுவார்களை விளிம்பிற்குத் தள்ளியது, அவற்றின் எண்ணிக்கை அவற்றின் வரம்பில் குறைந்து வருகிறது.



ஜாகுவார் வாழ்விடங்களில் மனித நடவடிக்கைகளின் ஊடுருவல் மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான மோதல்களை அதிகரிக்க வழிவகுத்தது. ஜாகுவார், ஒரு காலத்தில் சக்தி மற்றும் வலிமையின் சின்னங்களாகப் போற்றப்பட்டது, இப்போது பெரும்பாலும் அச்சுறுத்தலாகக் காணப்படுகிறது, ஏனெனில் அவற்றின் வேட்டையாடும் உள்ளுணர்வு அவற்றை கால்நடைகள் மற்றும் மனிதர்களுடன் கூட தொடர்பு கொள்கிறது.

ஒரு காலத்தில் ஜாகுவார் சுதந்திரமாக சுற்றித் திரிந்த பரந்த பிரதேசங்கள் சுருங்கி, அவை பாதிக்கப்படக்கூடியவையாகி, வேகமாக மாறிவரும் நிலப்பரப்புக்கு ஏற்றவாறு போராடி வருகின்றன. அவர்களின் எதிர்காலம் சமநிலையில் தொங்குகிறது, அவர்களின் வாழ்விடத்தைப் பாதுகாப்பதற்கும் மனிதர்களுடன் இணைந்து வாழ வேண்டியதன் அவசியத்திற்கும் இடையில் தத்தளிக்கிறது.

எர்த்.ஆர்க், ஜாகுவார் சுதந்திரமாக உலவுவதற்கு பாதுகாப்பான பாதையை வழங்கும், பாதுகாக்கப்பட்ட தாழ்வாரங்களை நிறுவி இணைக்கும் முன்முயற்சிகளால் வழிநடத்தப்பட்டு, பாதுகாப்பு முயற்சிகளின் அலை வேகம் பெறுகிறது என்று குறிப்பிடுகிறது. பாதுகாப்பு அமைப்புகள் உள்ளூர் சமூகங்களுடன் ஒத்துழைப்பை உருவாக்குகின்றன, சகவாழ்வை மேம்படுத்துகின்றன மற்றும் மோதல்களின் மூல காரணங்களை நிவர்த்தி செய்கின்றன.

சமூகம் சார்ந்த பாதுகாப்புத் திட்டங்கள் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக வெளிவந்துள்ளன, வெற்றிகரமாக மோதல்களைக் குறைத்து, மனிதர்களுக்கும் ஜாகுவார்களுக்கும் இடையே இணக்கமான உறவுகளை வளர்க்கின்றன. இந்த முயற்சிகளில் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன, ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளை பராமரிப்பதில் ஜாகுவார்களின் முக்கிய பங்கு பற்றிய ஆழமான புரிதலை அளிக்கிறது.

ஜாகுவாரின் தலைவிதி பாதுகாவலர்களின் கைகளில் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் தேர்வுகளிலும் உள்ளது. நிலையான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், சகவாழ்வை ஊக்குவிப்பதன் மூலமும், நாம் காடுகளின் காவலர்களாக மாறுகிறோம், ஜாகுவாரின் புதிரான கர்ஜனை வனப்பகுதியில் வரும் தலைமுறைகளுக்கு தொடர்ந்து எதிரொலிப்பதை உறுதிசெய்கிறோம்.

- சரவணன் @ மணிகண்டன்



# வித்தியாசமான ஆலயங்கள்

சக்திவாய்ந்த வழிபாடு நமது ஆலயங்கள் அனைத்துமே தனிச் சிறப்பு வாய்ந்தவை. அவற்றில் சில வித்தியாச மான ஆலயங்கள் பற்றி இங்கு காண்போம்.

* கோவில் கோபுரங்களில் பல்வேறு கடவுள் சிற்பங்கள் இருப்பதைப் பார்த்திருப் போம். ஆனால் மதுரை மேலமாசி வீதி- வடக்கு மாசி வீதி சந்திப்பில் உள்ள நவநீத கிருஷ்ணன் ஆலய கோபுரத்தில் மகாத்மா காந்தி, அவர் மனைவி கஸ்தூரிபாய், ஜவஹர் லால் நேரு, நேதாஜி ஆகியோரின் சிலைகள் இடம் பெற்றுள்ளன.

* ஐயன்பாளையம் முத்தாலம்மன் கோவில் கோபுரத்திலும் காந்தி, நேரு ஆகியோரின் சிலைகளைக் காணலாம்.

* புதுச்சேரி உப்பளத்திலுள்ள நேதாஜிநகர் தேசமுத்து மாரியம்மன் கோவில் முகப்பில் பாரதியாருக்கு சிலை வைத்துள்ளனர். பாரதி யார் புதுச்சேரியில் தங்கியிருந்தபோது அடிக்கடி இக்கோவிலுக்கு வந்து செல்வாராம். இக்கோவில் அம்மனைப் போற்றி பல பாடல்களையும் பாரதியார் பாடியுள்ளார்

* மயிலாப்பூர் ஆலயத்தில் வள்ளுவன்- வாசுகி சிலைகள் உள்ளன.

* ஒவ்வோர் ஆண்டும் இந்திய சுதந்திர தினமான ஆகஸ்டு 15-ஆம் தேதி காலையில், சிதம்பரம் நடராசர் கோவிலில் நம் தேசியக் கொடியை ஒரு வெள்ளித் தட்டில் வைத்து,அதை நடராசர்முன் வைத்து பூஜை செய்வார் கள். பின் அக்கொடியை அர்ச்சகர் எடுத்து வர மேளதாளத்துடன் சென்று கோவில் கிழக்கு கோபுரத்தில் ஆலய தீட்சிதர் அக்கொடியை ஏற்றுவார். அப்போது கோவிலுக்கு வருவோர் அனைவரும் தேசியக் கொடிக்கு மரியாதை செய்வார்கள். வேறு எந்தக் கோவிலிலும் இல்லாத சிறப்பான நிகழ்ச்சி இது.

* மயிலம் முருகன் கோவிலில், முருகன் மணக் கோலத்தில் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். கிழக்கு ராஜகோபுரம் எப்போதும் மூடிய நிலையில் இருக்கும். ஆண்டுக்கு இருமுறை ஆனித் திருமஞ் சனம், மார்கழி திருவாதிரையின்போது மட்டும் இந்த வாயில் திறக்கப்படும். மற்ற நாட்களில் பக்தர்கள் தெற்கு வாயில் வழியாகத்தான் செல்வார்கள்.

* அனைவருக்கும் மேலான ஈஸ்வரனே கோவில் எழுப்பி சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, தன்னைத் தானே வழிபட்ட தலம் மதுரையிலுள்ள இம்மையில் நன்மை தருவார் கோவிலாகும். சிவனும் பார்வதியும் ஒன்றாக அமர்ந்து சிவபூஜை செய்யும் காட்சி இங்கு மூல விக்ரகமாக இருக்கிறது. இக்கோவில் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு முற்பட்ட கோவிலாகும்.

* நேபாளத் தலைநகர் காட்மண்டில், பாக்மதி நதிக்கரையில் அமைந்திருக்கும் சிவாலயம் இரண்டு அடுக்குகள் கொண்டது. இந்தக் கோவிலின் கூரை தங்கத்தால் வேயப் பட்டது. கதவுகள் வெள்ளியால் ஆனது. சந்நிதிக்கு நேராகக் காட்சி தரும் நந்தி பஞ்சலோகத்தில் ஆனது. இங்கு அருள்பாலிக்கும் சிவனுக்கு ஆறுமுகங்கள் உண்டு. இவர் பெயர் பசுபதிநாதர்.

* ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மேற்கே சுமார் பத்து கிலோமீட்டர் தூரத்தில், மேற்கு தொடர்ச்சி மலைப்

பகுதியில் அமைந்துள்ளது கட்டழகப் பெருமாள் கோவில். இங்கு சுந்தரவல்லி, சவுந்தரவல்லி சமேத சுந்தரராசப் பெருமாளைத் தரிசிக்கலாம். மலைமீதுள்ள இக்கோவிலுக்கு 247 படிகளில் ஏறிச் செல்ல வேண்டும். தமிழ் எழுத்துகள் 247-ஐ தத்துவார்த்தமாக உணர்த் தும் விதமாக அமைந்துள்ளன இப்படிகள். இம்மலையிலுள்ள சிலம்பு ஊற்று என்ற தீர்த்தம் நாவல் மரப் பொந்திலிருந்து வருகிறது. கோவிலின் பின்புறமுள்ள மலையைப் பார்த்தால் பெருமாளே பள்ளி கொண்டதுபோல் காட்சி தருகிறது.

* சோட்டானிக்கரை பகவதி அம்மன் ஒரு நாளுக்கு மூன்று விதமான ஆடைகள் அணிந்து மூன்று வடிவங்களில் காட்சி தருகிறாள். காலையில் வெண்ணிற ஆடையுடன் சரஸ்வதி தேவியாகவும்; உச்சி வேளையில் செந்நிற ஆடையுடன் லட்சுமி தேவியாகவும்; மாலையில் நீல நிற ஆடையில் துர்க்கா தேவியாகவும் காட்சி தருகிறாள். இந்த மூவகை தரிசனத் தைக் காண்பவர்கள் நினைத்தது நிறைவேறும்.

* மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் கீழ் கோபுரத்தின் நடுவிலிருந்து மேல் கோபுரத்தை நோக்கி ஒரு கோடு போட்டால், அது சிவலிங்கப் பெருமான் வழியாகச் செல்லும். அது போல் வடக்கு- தெற்கு கோபுரங்களுக்கிடையே கோடிட்டுப் பார்த்தால், அது சுந்தரேசர் சந்நிதியை இரண் டாகப் பகிர்ந்து செல்லும். இந்த அமைப்பு அக்கால சிற்பிகளின் அபரிமிதமான திறனை வெளிப்படுத்துகிறது.

* திருவண்ணாமலையிலிருந்து 16 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தேவிகாபுரம். இங்குள்ள பொன்மலைநாதர் கோவிலில் அருள்பாலிக்கும் கனககிரீஸ்வரருக்கு தினமும் வெந்நீரில் அபிஷேகம் செய்கிறார்கள். காலையில் இரண்டு மணி நேரம் மட்டுமே பூஜை செய்வார்கள். சிவராத்திரியன்று விசேஷ பூஜைகள் உண்டு.

* 108 திவ்யதேசங்களில் முதன்மை ஆலயமான ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்கு அமாவாசை, ஏகாதசி, மாதப்பிறப்பு ஆகிய நாட்களில் வெந்நீரால் அபிஷேகம் செய்வார்கள். வேறு எந்த திவ்ய தேசத்திலும் இதுபோல் செய்வதில்லை.

* கும்பகோணம் நல்லம் தலத்திலுள்ள ஆலயத்தில் நடராசர் சுயம்பு வடிவில் காட்சி தருகிறார். இவர் கையில் ரேகையும், காலில் பச்சை நரம்பும் நன்கு தெரிகின்றன. இவரை சற்று தொலைவிலிருந்து பார்த்தால் 50 வயது முதியவர்போலவும், அருகிலிருந்து பார்த்தால் 30 வயது இளைஞர்போலவும் காட்சி தருகிறார்.

* விழுப்புரத்தையடுத்த ரிஷிவந்தியத்திலுள்ள முத்தாம்பிகை சமேத அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்தின் மூலவரான லிங்கத்திற்கு தேனாபிஷேகம் நடைபெறும்போது லிங்க பாணத்தை நன்கு கவனித்துப் பார்த்தால், அம்மன் தன் கையில் கிளி வைத்துக் கொண்டு நிற்பது போன்ற தோற்றத்தைக் காணலாம். மற்ற நேரங்களில் லிங்கம் சாதாரணமாகத்தான் தெரியும்.

* ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலிலுள்ள உற்சவ நந்திகேஸ்வரர் அனுமன் போன்ற தோற்றத்துடன் உள்ளார். இரு கரங்களைக் கூப்பி மான், மழுவுடன் உள்ளார். மான், மழுவினை மறைத்து விட்டுப் பார்த்தால் இந்த நந்தி அனுமன் போன்றே காட்சியளிப்பார்.

* அருப்புக்கோட்டை அருகிலுள்ளது திருச்சுழி என்ற ஊர். இங்குள்ள சிவன் கோவிலில் காணப்படும் நடராசர் பச்சிலை மூலிகை யால் ஆனவர்.

* உலகிலேயே மிகவும் உயரமான முருகன் சிலை மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 140 அடி உயரம் கொண்ட சிலை இது. தமிழக சிற்பிகள் 15 பேர் சேர்ந்துதான் இச்சிலையை உருவாக்கினார்கள்.

* திருக்கண்ணமங்கை தலத்தில் உள்ள தாயார் சந்நிதியில் இரு ஜன்னல்கள் உள்ளன. இதில் தேனீக்கள் கூடு கட்டுகின்றன. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை சூரியன் வலப் பக்கம் சஞ்சாரம் செய்யும்போது தேனீக்கள் வலப்புற ஜன்னலில் கூடு கட்டுகின்றன. ஆடி மாதம் முதல் மார்கழி வரை சூரியன் இடப்பக்கம் சஞ்சாரம் செய்யும்போது இடப்புற ஜன்னலில் கூடு கட்டுகின்றன. இந்த அதிசயத்தை இன்றும் காணலாம்.

* புதுக்கோட்டை மாவட்டம், பரக்கலக் கோட்டை ஆவுடையார் கோவில் திங்கட் கிழமை மட்டுமே திறந்திருக்கும். நள்ளிரவு 12.00 மணிக்கு மட்டுமே வழிபாடு. பிற நாட்களில் கோவில் மூடியிருக்கும்.

* தஞ்சை அருகே தென்குடித் திட்டையிலுள்ள வசிஸ்டேஸ்வரர் ஆலய கருவறை விமானம் சந்திர காந்தக்கல் வைத்துக் கட்டப் பட்டுள்ளது. இக்கல் சந்திரனி டமிருந்து கிரணங்களைப் பெற்று நீராக்கி, அதை 24 நிமிடங்களுக்கு ஒருமுறை மூல லிங்கத்தின்மீது விழச் செய்து அபிஷேகம் செய்கிறது.

* நாம் சாதாரணமாக கோவில் உண்டியலில் பணம், ஆபரணங்களைத்தான் காணிக்கையாகப் போடுவோம். ஆனால் இலங்கை கதிர்காம முருகன் ஆலயத்தில் காணிக்கையாக காசோலை (செக்) எழுதிப் போடுகின்றனர்.

- K.சுபுலட்சுமி

# ஐஐடி மெட்ராஸ், மனிதக் கரு மூளையின் மிக விரிவான 3டி உயர் தெளிவுத்திறன் படங்களை வெளியிட்டுள்ளது




சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்), மனிதக் கரு மூளையின் மிக விரிவான 3டி உயர் தெளிவுத்திறன் கொண்ட படங்களை வெளியிட்ட உலகின் முதலாவது ஆராய்ச்சி நிறுவனமாகும்.

ஐஐடி மெட்ராஸ்-ல் உள்ள சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையத்தின் இந்த முன்னோடிப் பணியின் மூலம், மூளை வரைபடமாக்கும் தொழில்நுட்பத்தின் எல்லைகளைக் கடந்து, இந்தியாவை மூளை வரைபடமாக்கும் அறிவியலின் உலகளாவிய மையமாகத் திகழச் செய்துள்ளது.

உலகெங்கும் உள்ள அனைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும் இலவசமாகக் கிடைக்கும் வகையில், இதன் தரவுத் தொகுப்பான ‘தரணி’யை (DHARANI) ஓபன் சோர்ஸ் முறையில் பின்வரும் இணைப்பில் காணலாம் (https://brain-portal.humanbrain.in/publicview/index.html)

உலகிலேயே முதன்முறையாக சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையத்தால் உருவாக்கப்பட்ட அதிநவீன மூளை வரைபடமாக்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, 5,132 மூளைப் பிரிவுகள் டிஜிட்டல் முறையில் பெறப்பட்டுள்ளன. இந்தப் பணியால் நரம்பியல் துறை மேம்படுத்தப்படுவதுடன், மூளையைப் பாதிக்கும் உடல்நிலைக்கான சிகிச்சையின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.




இத்தகைய மேம்பட்ட மனித நரம்பியல் தரவுகள் இந்தியாவில் தயாரிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட தொகையைப் பொறுத்தவரை மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பத்தில் ஒரு பங்குதான் செலவிடப்பட்டுள்ளது. இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ருமேனியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மட்டுமின்றி, சென்னையைச் சேர்ந்த மெடிஸ்கேன் சிஸ்டம்ஸ், சவீதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவையும் இணைந்து இந்த ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்பட்டது.

ஐஐடி மெட்ராஸ்-ன் சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையத்தின் தலைவர் பேராசிரியர் மோகனசங்கர் சிவப்பிரகாசம் தலைமையிலான




இந்த ஆராய்ச்சி இந்தியாவிற்கு மிக முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் உலகில் பிறக்கும் 25 மில்லியன் குழந்தைகளில் ஐந்தில் ஒன்று இந்தியாவில் பிறக்கிறது. (ஆதாரம்: https://www.unicef.org/india/key-data#:~:text=With%20the%20birth%20of%2025,the%20world's%20annual%20child%20births)

கருவில் இருந்து குழந்தைப் பருவம், வளரிளம் பருவம், இளமைப் பருவம் வரை மூளை வளர்ச்சியையும், கற்றல் குறைபாடுகள், மனஇறுக்கம் போன்ற வளர்ச்சிக் குறைபாடுகளையும் புரிந்து கொள்வது நாட்டிற்கு மிகவும் அவசியமாகிறது.

இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்தைச் சேர்ந்தவரும் ஐஐடி மெட்ராஸ் முன்னாள் மாணவரும் இன்போசிஸ் இணை நிறுவனருமான திரு. கிரிஸ் கோபாலகிருஷ்ணன், பிரேம்ஜி இன்வெஸ்ட் (Premji Invest), ஃபோர்ட்டிஸ் ஹெல்த்கேர் (Fortis Healthcare), அஜிலஸ் டயக்னாஸ்டிக்ஸ் (Agilus Diagnostics) நிறுவனங்களும் இப்பணிக்கு ஆதரவு அளித்தன. முன்னணி செயற்கை நுண்ணறிவு நிறுவனமான என்விடியா (NVIDEA) பெட்டாபைட் மூளைத் தரவைச் செயலாக்க உதவும் பணிக்காக இம்மையத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

தற்போதைய கரு இமேஜிங் தொழில்நுட்பங்கள், ஆரம்பகால நோயறிதல், வளர்ச்சிக் கோளாறுகளுக்கு சிகிச்சை அளித்தல் போன்றவை இத்தகைய உயர் தெளிவுத்திறன் கொண்ட மூளைப் படங்களை உருவாக்குவதன் முக்கிய பயன்பாடுகளாகும்.

### சிறப்பிதழ் வெளியீடு

நூறாண்டுகள் பழமை வாய்ந்த நரம்பியல் அறிவியல் இதழான ஜர்னல் ஆஃப் கம்பேரிட்டிவ் நியூராலஜி (Journal of Comparative Neurology), இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை சிறப்பு இதழாக வெளியிட்டது. இதழ் முழுவதும் ஐஐடி மெட்ராஸின் ஆராய்ச்சியைப் பற்றி மட்டுமே இடம்பெற்றிருப்பதால் உண்மையிலேயே தனித்துவமிக்கதாகும்.

இந்த ஆராய்ச்சியின் முக்கியத்தை விவரித்த ஜர்னல் ஆஃப் கம்பேரேட்டிவ் நியூராலஜி இதழின் ஆசிரியர் குழுத் தலைவரான சுசானா ஹெர்குலானோ-ஹவுசல் கூறுகையில், "மனிதக்கரு மூளை பற்றி பொதுவில் அணுகக்கூடிய மிகப்பெரிய டிஜிட்டல் தரவுத்தொகுப்புதான் பரணி. 2020-2022 ஆண்டுகளில் கோவிட் தொற்றுக் காலத்தில் இந்தியாவிற்கான தனிப்பயனாக்கப்பட்ட தொழில்நுட்பத் தளத்துடன் இது உருவாக்கப்பட்டது. ஆலன் பிரைன் அட்லஸ்-க்கு செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் பத்தில் ஒரு பங்குதான் செலவிடப்பட்டுள்ளது. எனவே, ஆலன் பிரைன் இன்ஸ்டிடியூட் உடன் ஐஐடி மெட்ராஸ் இணைந்து செயல்பட்டு, அமெரிக்காவுடன் மனித மூளை வரைபட அட்டவணையில் இந்தியா இணைகிறது. அங்கு மனித மூளையை உருவாக்கும் கட்டமைப்புகள் பற்றி கிடைக்கக்கூடிய அறிவை மனிதகுலத்திற்கு இலவசமாகக் கிடைக்கக்கூடிய அட்லஸ்களை வழங்க பெரிய தொகை முதலீடு செய்யப்படுகிறது" என்றார்.

அறிவியல், தொழில்நுட்பம், கணினி மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் பெரிய அளவிலான பல்துறை முயற்சியை ஆற்றுவதற்கும், மனித மூளையை செல்லுலார் அளவில் வரைபடமாக்குவதற்கும் 2022 இல் சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையம், அதிநவீன வசதிகளுடன் தொடங்கப்பட்டது.

அதிநவீனப் பணியை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்களைப் பாராட்டிப் பேசிய இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் பேராசிரியர் அஜய் குமார் சூட் கூறுகையில், "ஐஐடிஎம்-மின் மூளை மையத்தில் அதிநவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய கரு மூளை வரைபடத்தை உருவாக்கி அகில இந்திய அளவில் முன்னணியில் செயல்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. மூளை அறிவியல் துறையில் அறிவியல் அறிவை மேம்படுத்தும் முயற்சிக்கு ஆதரவு அளிக்கும் விதமாக தொடக்க நிதியை எமது அலுவலகம் வழங்கியிருப்பதுடன், உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு உலகளாவிய வளத்தையும் உருவாக்கியதில் மகிழ்ச்சியடைகிறோம்" எனத் தெரிவித்தார்.

ஐஐடி மெட்ராஸ்-ன் மதிப்புமிகு முன்னாள் மாணவரும் இன்போசிஸ் இணை நிறுவனருமான திரு. கிரிஸ் கோபாலகிருஷ்ணன் கூறும்போது, "இந்திய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் மூலம் உலகத்தரம் வாய்ந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை உருவாக்க முடியும் என்பதை இந்த சாதனை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. தனித்துவமான பொது-கொடை-தனியார் பங்களிப்பின் (Public- private -philanthrophy- partnership) வெற்றியும் இதனால் நிரூபிக்கப்பட்டுள்ளது. உலகளவிலான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு நாம் பெரியளவில் கனவுகாண வேண்டும். லட்சிய ஆராய்ச்சி திட்டங்கள் பலகட்டங்களையும், பல ஆண்டுகளையும் உள்ளடக்கியவை. இந்தியாவில் இதுபோன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கவும், தனியார் மற்றும் பொது ஆதரவைப் பெறவும் இத்திட்டம் ஊக்குவிக்கும் என்பது உறுதி" என்றார்.

**'உலகளாவிய ஆராய்ச்சியில் முக்கிய ஆதாரம்'**

கருத்தரித்த இரண்டாவது மூன்று மாதங்களில் மனிதக் கரு மூளையின் விரிவான செல் தீர்மான அடலசை சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையம் உருவாக்கியுள்ளது. இந்த விரிவான அட்லசில் ஆராய்ச்சியாளர்கள் 500-க்கும் மேற்பட்ட மூளைப் பகுதிகளைக் கண்டறிந்து குறித்துள்ளனர். இம்முயற்சி பல ஆண்டுளாக மனித நரம்பியல் ஆராய்ச்சியை மேலும் முன்னேற்றுவதற்கான உலகளாவிய குறிப்பேடாக செயல்படும்.

இந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை மேலும் விவரித்த ஐஐடி மெட்ராஸ்-ன் சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையத்தின் தலைவர் பேராசிரியர் மோகனசங்கர் சிவப்பிரகாசம் கூறுகையில், "புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு இந்த ஆய்வு வழிவகுக்கும், நரம்பியல் வளர்ச்சிக் கோளாறுகள் மற்றும் கருவின் மருத்துவத்தில் முன்னேற்றங்களை அளவிடவும் ஏதுவாக இருக்கும். மனிதக் கரு மூளையானது பொதுவாக அணுகக்கூடிய மிகப்பெரிய டிஜிட்டல் தரவுத்தொகுப்பாகும், தற்போதைய அறிவை 20 மடங்கு மேம்படுத்துகிறது. இதுபோன்ற மேம்பட்ட மனித நரம்பியல் தரவுகள் இந்தியாவில் இருந்து தயாரிக்கப்பட்டு உலகளாவிய வளமாக இலவசமாகக் கிடைப்பது இதுவே முதல் முறையாகும்" என்று குறிப்பிட்டார்.

**சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையம்**

இந்தியாவின் முதன்மையான தொழில்நுட்பக் கல்வி நிறுவனமான இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மெட்ராஸ் (ஐஐடிஎம்), அறிவியல், தொழில்நுட்பம், கம்ப்யூட்டிங், மருத்துவம் ஆகிய துறைகளில் பெரிய அளவிலான பல்துறை முயற்சியை மேற்கொள்ளும் வகையில் சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையம் என்ற அதிநவீன மையத்தை 2022-இல் தொடங்கியது. மனித மூளைகள் செல்லுலார் மட்டத்தில் இம்மையத்தில் வரைபடமாக்கப்படுகின்றன. நரம்பியல் மற்றும் நரம்பியல் தொழில்நுட்பங்களில் மாற்றத்தக்க தாக்கத்துடன் மனித மூளை ஆராய்ச்சிக்கான உலகளாவிய முன்னணி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

உலகத் தரம் வாய்ந்த உயர்-செயல்திறன் ஹிஸ்டாலஜி பைப்லைனை இம்மையம் உருவாக்கியுள்ளது, இது முழு மனித மூளையையும் பெட்டாபைட் அளவில் உயர் தெளிவுத்திறன் கொண்ட டிஜிட்டல் படங்களாக மாற்றி வழங்குகிறது. பல்வேறு வகையான மற்றும் வயதுடைய மனித மூளையின் இந்த தனித்துவமான முதல்-வகுப்பு தரவுத் தொகுப்புகள் மனித மூளையின் முன்னோடியில்லாத உயர்-தெளிவு பார்வையை வழங்குகின்றன, அவை முழு மூளை முழுவதும் செல்லுலார் நிலை விவரங்களை வெளிப்படுத்துகின்றன.

கடந்த இரு ஆண்டுகளில், நாட்டிலுள்ள பல்வேறு மருத்துவ நிறுவனங்களிடமிருந்து வெவ்வேறு வகையான, வயதுடைய (கரு, பிறந்த குழந்தைகள், வளரிளம் குழந்தைகள், வயது வந்தோர், முதியோர்) மற்றும் நோய்வாய்ப்பட்டோர் (பக்கவாதம், டிமென்ஷியா) என 200-க்கும் மேற்பட்ட மூளைகளை இம்மையம் கையகப்படுத்தி அவற்றை செல்லுலார் அளவில் மாற்றுகிறது. அதனைத் தொடர்ந்து மையத்தின் உயர்-செயல்திறன் இமேஜிங் தளத்தின் மூலம் செல்லுலார் தெளிவுத்திறன் டிஜிட்டல் தொகுதிகளாக அவற்றை செயலாக்குகிறது.

பல்வேறு வகையான உலகில் மனித மூளைத் தரவுகளின் மிகப்பெரிய களஞ்சியத்தை உருவாக்குவதன் மூலம், இம்மையம் உலகளாவிய தலைமையை அடைவதற்கான தனித்துவமிக்க நிலையில் உள்ளது. வரவிருக்கும் ஆண்டுகளில் இது உலகளாவிய ஆதார மையமாகச் செயல்படும்.

Source: Press Information Bureau

# குழந்தைகள் ஏன் தவறாக நடந்து கொள்கின்றனர்?

## இதை எப்படி சரிசெய்வது?



குழந்தை வளர்ப்பு என்பது சில சமயங்களில் ஒரு மர்மத்தைத் தீர்க்க முயற்சிப்பது போல் இருக்கும். ஆம். ஒரு நாள், ஒரு குழந்தை உலகின் இனிமையான நபராக இருப்பார்கள். ஆனால், அடுத்த நாள், அவர்கள் எல்லா தொந்தரவுகளையும் செய்வார்கள். குழந்தைகளின் இந்த தவறான நடத்தைகள் பெற்றோருக்கு குழப்பமாகவும் வெறுப்பாகவும் இருக்கலாம்.

ஏன் குழந்தைகள் இப்படி செய்கிறார்கள் என்று பல பெற்றோருக்கும் குழப்பமாக இருக்கும். ஆனால் குழந்தைகளின் நடத்தை அவர்களின் வாழ்க்கையில் ஆழமான ஒன்றை பிரதிபலிக்கிறது. குழந்தைகள் தவறாக நடந்துகொள்வதற்கான பொதுவான காரணங்கள் குறித்து தற்போது பார்க்கலாம்.

வீட்டில் அதிக மன அழுத்தம், பதற்றம் அல்லது சீரற்ற விதிகள் இருந்தால், குழந்தைகள் அதற்குப் பதிலடியாகச் செயல்படலாம். அவர்கள் அமைதியற்றதாகவோ அல்லது குழப்பமாகவோ உணரலாம். தங்களின் தவறான நடத்தை மூலம் இதை வெளிப்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக, பெற்றோருக்கு இடையே ஒரு மோதலை அவர்கள் கவனித்தால் அல்லது குடும்ப நடைமுறைகளில் அடிக்கடி மாற்றங்களைச் சந்தித்தால், இந்த நிகழ்வுகளைச் செயல்படுத்துவதற்கு உணர்ச்சிகரமான கருவிகள் அவர்களிடம் இல்லாமல் இருக்கலாம், அதற்குப் பதிலாக தவறான நடத்தைகள் மூலம் எதிர்வினையாற்றலாம்.

குழந்தைகள் பயமின்றி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த பாதுகாப்பான இடத்தை உருவாக்குவது அவசியம். வாரம் ஒரு முறை குடும்பத்தினர் அனைவரும் அமர்ந்து பேசுவது போன்ற விதிகளை உருவாக்கலாம். அனைவரும் அந்த வாரத்தில் தங்களுக்கு நடந்த நல்ல விஷயங்கள் அல்லது சவாலான விஷயம் பற்றி பகிர்ந்து கொள்ளலாம்.

குழந்தைகள் வயதாகும்போது, அவர்கள் முன்மாதிரிகள் மற்றும் நண்பர்களுக்காக வீட்டைத் தாண்டி ஆராயத் தொடங்குகிறார்கள். ஆனால் இது குழந்தைகளுக்கு சில நேரங்களில் சிக்கலை உண்டாககலாம். சகாக்கள் அல்லது வகுப்பு தோழர்களால் வற்புறுத்தப்படுவதை இளம் பருவத்தினர் உணர்ந்தால், அவர்கள் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மோசமான நடத்தைகளைப் பின்பற்றலாம்.

சகாக்களின் அழுத்தத்தை எவ்வாறு கண்டறிந்து எதிர்ப்பது என்பதை குழந்தைக்கு கற்பிப்பதற்காக தன்னம்பிக்கையை வளர்ப்பது அவசியம். குழந்தைகள் தனக்காக வாதிடுவதற்கான நல்ல முறைகளைப் பற்றி விவாதிக்கலாம். பள்ளியில் இருக்கும் நேரம் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும், குறிப்பாக கல்வி மற்றும் சாராத செயல்பாடுகளில் அதிக அழுத்தம் இருக்கும்.

வீட்டுப்பாடம், சோதனைகள் அல்லது தங்கள் சகாக்கள் மற்றும் ஆசிரியர்களுடனான சமூக தொடர்புகளால் குழந்தைகள் சுமையாக உணரலாம். இந்த பதற்றம் அடிக்கடி மாணவர்களின் வீட்டைப் பின்தொடர்கிறது. இதன் விளைவாக வெறித்தனம், எதிர்ப்பு மற்றும் தவறான நடத்தைகளை குழந்தைகள் வெளிப்படுத்தலாம்.

பள்ளியில் இருந்து வீட்டுக்கு வந்த உடன் உடனே மீண்டும் படிக்க சொல்லாமல், வீட்டுப்பாடம் செய்வதற்கு முன் அவர்கள் ஓய்வெடுக்கலாம் அல்லது சில வேடிக்கையான செயல்களைச் செய்யட்டும். “உங்கள் நாளின் சிறந்த பகுதி எது?” போன்ற வெளிப்படையான கேள்விகளைக் கேளுங்கள். அல்லது “ஏதாவது உங்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தியதா?” குழந்தைகளின் மனநிலையை இதன் மூலம் புரிந்துகொள்ள முடியும்.

– K.கலைமணி

# அரசு மருத்துவமனைகளுக்கு தரமற்ற மருந்துகள் விநியோகம்:

# தணிக்கை அறிக்கையில் தகவல்



அரசு மருத்துவமனைகளுக்கு குறைந்த காலத்துக்குள் காலாவதியாகும் மருந்துகளும், தரமற்ற மருந்துகளும் வழங்கப் பட்டதாக இந்திய தணிக்கைத் துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங் களை தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் கருப்புப் பட்டியலில் சேர்க்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தணிக்கை அறிக்கை: தமிழக சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார சேவைகள் தொடர்பான செயலாக்க தணிக்கை அறிக்கையில் இதுதொடர்பாக குறிப்பிடப்பட்டி ருப்பதாவது:

குடும்ப நல இயக்குநரகத்தில் வட்டார விரிவாக்க கல்வியாளர், குடும்ப நல உதவியாளர், பெண் சுகாதார பார்வையாளர்கள், மகப்பேறு குழந்தைகள் நல அலுவலர் உள்ளிட்ட பணியிடங்களில் 75 சதவீதம் காலியாக இருந்தது. இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையிலும் காலிப் பணி-யிடங்கள் அதிகமாக இருந்ததால் அலோபதிக்கு மாற்றான மருந்துகளை மேம்படுத்துவதில் சுணக்கம் ஏற்பட்டது.

அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்திகளில் சரிவர ஜிபிஎஸ் சாதனங்கள் பொருத்தப்படாமல் இருந்ததால், விபத்து அல்லது அவசரத் தேவை உள்ள இடங்களுக்கு அருகில் இருக்கும் வாகனங்களை உரிய நேரத்தில் கண்டறிய முடியவில்லை.

தரமற்ற மருந்துகள்: அரசு மருத்துவமனைகளில் 36 சதவீத பிரசவங்கள் அறுவை சிகிச்சை மூலம் கடந்த 2019-21-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றுள்ளன. இது இந்திய சராசரி விகிதமான 14 சதவீதத்தைக் காட்டிலும் இரண்டரை மடங்குக்கு மேல் அதிகமாகும். மருத்துவமனைகளில் பயன்படுத்தப்பட்டு வந்த மருத்துவ உபகரணங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. பராமரிப்பு செய்ய வேண்டிய உபகரணங்களின் பட்டியலை தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்துக்கு சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளின் தலைவர்கள் வழங்கவில்லை.

உரிய ஒருங்கிணைப்பு இல்லாததால் தேவையற்ற மருத்துவ உபகரணங்களை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த 2016-21 காலகட்டத்தில் கிடங்குகளில் உள்ள மருந்துகளில் முறையாக தரக் கட்டுப்பாடு செய்யப்படவில்லை. இதனால், குறைந்த காலத்துக்குள் காலாவதியாகும் மருந்துகளும், தரமற்ற மருந்துகளும் மருத்துவமனைகளுக்கு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அன்புமணி

# அதானியை முதல்வரின் மருமகன் சந்தித்தார்; மறுக்கமுடியுமா?: அண்ணாமலை கேள்வி

தொழிலதிபர் அதானியை முதல்வர் மு.க. ஸ்டாலினின் மருமகன் சபரீசன் சந்தித்துள்ளதாக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

முதல்வர் சார்பில் அவரைச் சார்ந்திருக்கக்கூடிய ஐஏஎஸ் அதிகாரிகளும் செயலாளர்களும் அதானியை சந்தித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதானியை தான் சந்திக்கவில்லை என முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் கூறியிருந்த நிலையில், அண்ணாமலை இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சென்னை தியாகராய நகரில் உள்ள பாஜக தலைமை அலுவலகமான கமலாலயத்தில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

''திமுக அரசு அதானிக்கும் ஒப்பந்தம் கொடுத்துள்ளது என்பதை தொடர்ந்து பாஜக கூறிவருகிறது. இதற்கு அமைச்சர் ஒருவர் மறுப்பு தெரிவித்து, அந்த ஒப்பந்தம் அதிமுக ஆட்சியில் கொடுக்கப்பட்டது என்கிறார். ஆனால், திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகும் அதானிக்கு ஒப்பந்தம் கொடுத்துள்ளது.

சட்டப்பேரவையில் முதல்வர் பேசும்போது, அதானியை சந்தித்ததாக எதிர்க்கட்சிகள் குற்றச் சாட்டை முன்வைப்பதாகக் கூறுகிறார். அதானியை சந்திக்கவில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

அதானியை முதல்வர் சந்தித்தார் என்று பாஜக ஒருபோதும் கூறவில்லை. அதானியை சந்திப்பது குற்றமும் அல்ல. அதானிக்கு திமுக ஒப்பந்தம் கொடுத்துள்ளதா? இல்லையா? என்பது மட்டுமே எங்கள் கேள்வி.

முதல்வரின் மருமகன் அதானியை சந்தித்தார் என்ற குற்றச்சாட்டை நாங்கள் (பாஜக) முன்வைக் கிறோம். உங்களைச் சார்ந்திருக்கக்கூடிய ஐஏஎஸ் அதிகாரிகள், செயலாளர்கள் அதானியை சந்தித்தனர்.



உங்கள் மருமகன் சந்திப்பது நீங்கள் சந்திப்பதைப்போன்றுதானே? உங்கள் மருமகன் சபரீசன் இதுவரை அதானி நிறுவனத்தைச் சேர்ந்த யாரையும் சந்திக்கவில்லை என சட்டப்பேரவையில் சொல்வீர்களா? அப்படிக் கூறினால் நாங்கள் அதனை நிரூபிக்கிறோம்.

திசைதிருப்பும் செயலை முதல்வர் கைவிட வேண்டும். அதானியை சந்திக்கவில்லை என மடைமாற்றம் செய்யும் முயற்சியை முதல்வர் கைவிட வேண்டும்.

சட்டப்பேரவையில் பேசியதற்கு நாளை முதல்வர் விளக்கமளிக்க வேண்டும். முதல்வர் சார்பாக மருமகனோ, அதிகாரிகளோ சந்திக்கவில்லை எனக் கூறட்டும், பின்னர் நாங்கள் அதனை நிரூபிக்கிறோம்

அதானிக்கு திமுக அரசு ஒப்பந்தம் கொடுத்துள்ளது. அப்படி இருக்கையில் அதானியையும் பாஜகவையும் இணைத்து, திமுக எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபடுவது ஏன்?'' என அண்ணாமலை கேள்வி எழுப்பினார்.

- K.ரமேஷ்குமார்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் முன்னிலையில் 09.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நாற்றாண்டு விழாவையொட்டி, “நாற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது” என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து சிறப்பான கருத்துகளை எடுத்துரைத்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பள்ளி மற்றும் 3 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகைக்கான வங்கி வரைவோலைகளையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருச்சிலைகளையும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர் கல்வித் துறை அமைச்சரும், விழாக் குழு இணைத் தலைவருமான முனைவர் கோவி. செழியன், சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் தொல் திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை, விழாக் குழு உறுப்பினர்கள், பேரவை முன்னாள் தலைவர் ஆர். ஆவுடையப்பன், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.ஞானசேகரன், பேரவை முன்னாள் செயலாளர் மா.செல்வராஜ், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

– P.அசோக்குமார்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
8754582123
BHIM Paytm UPI UNIFIED PAYMENTS INTERFACE


TAMILNI
PRINTZ & GRAPHICS
ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS
DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION
DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER
WEBSITE
DESIGN
SERVICE
APPLY
PAN CARD
PASSPORT
ALL
ONLINE
SERVICE
DESIGN
MAGAZINE
NEWSPAPER
NEWS
ADDRESS:
3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097, EMAIL: rsprintzy@gmail.com
PH.: 044-3590 6002 MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - December 2024
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**


# Chandru Law Academy

Gandhi Road, Ambika Street,
(Near David School), Velachery, Chennai - 42.
Tamil Nadu ✆ : 073396 50446



Conducting

**COACHING FOR MAGISTRATE / APP / DISTRICT JUDGE EXAMINATIONS**
(All Major and Minor Acts)

COURSES

1. District Judge
2. Magistrate / Munsif
3. Assistant Public Prosecutor (APP)
4. All India Bar Examination (AIBE)
5. Common Law Admission Test (CLAT)














**Offline Class / நேரடி வகுப்புகள்**
Morning Batch :
Timings : 10.30 am to 1.30 pm
Separate Batches for
Week Days and
Saturday & Sundays

**Online Class / இணைய வழி வகுப்புகள்**
Evening Batch :
Timings : 5 pm to 8.30 pm
Weekly 4 Days
@ ZOOM APP

**@ VELACHERY**
Chennai.

**R. CHANDRASEKARAN**
Advocate
Chandru Law Academy
Founder & Director

Note : No fees for specially challenged & Third gender person

For Registration Contact **+91 73396 50446 / 90804 48871**